ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

கள்: பதினாறு — Valampurii

வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 15 ஞாயிற்றுக்கிழமை (01.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 317




ராப்பிய, றகுலக டுகளில்

# அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழரில் 4 இலட்சம் பேர் திருப்பியனுப்பப்படுவர்

## இலங்கை அரசு நம்பிக்கை

(கொழும்பு)

ஐரோப்பா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்களுக்குத் தொடர்ந்தும் அந்த நாடுகளில் தங்கியிருக்கக் கூடிய வாய்ப்புக்கள் அற்றுப் போகும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் உயர் மட்டப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஏழுமலையானை ...தார் ஜனாதிபதி

(கொழும்பு)

...கிந்த ராஜபக்ஷ நேற்று சிற ...லம் கொழும்பிலிருந்து ஆந் ...ணிகுண்டா விமான நிலையத் ...பின்னர் கார் மூலம் திருப்பதி ...றார்.

...வர் திருப்பதி ஏழுமலையா ... செய்தார். அவருக்குத் தேவ ...பில் சிறப்பான வரவேற்பு

...ின் வருகைக்குத் தமிழகத் ...மைப்புக்கள் கடும் எதிர்ப்புத் ...னால் (16 ஆம் பக்கம் பார்க்க)

## த.தே.கூட்டமைப்பின் 2 எம்.பிக்கள் நாடு திரும்புவர்

(கொழும்பு)

தற்போது வெளிநாடுகளில் வசித்து வரும் 2 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் நாடு திரும்பவுள்ளதாகக் கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், எம்.ஜே.சிவாஜிலிங்கம் ஆகியோரே இவ்வாறு நாடு திரும்பவுள்ளனர்.

யுத்த காலத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்கள் முன்வைத்ததாக சிவாஜிலிங்கம் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உடல் நலக் (16 ஆம் பக்கம் பார்க்க)

# ...் பொன்சேகாவை வைத்து நாட்டை ...தலைக்க எதிர்க் கட்சிகள் முனைப்பு

## பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய



(கொழும்பு)

கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதி சரத் பொன்சேகாவை அரசாங்கம் ஓரம் கட்டியுள்ளதாக எதிர்க்கட்சிகள் சுமத்தி வரும் குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வங்குரோத்து நிலையை அடைந்த சில அரசியல்வாதிகள் சரத் பொன்சேகா விவகாரத்தை பூதாகரமாக உருவாக்கி அதன் மூலம் நாட்டை சீர்குலைக்க சதித்திட்டம் தீட்டி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தை பலவீனப்படுத்துவதற்கு படைவீரர்களை எதிர்க்கட்சிகள் பயன்படுத்த முனைப்பு காட்டுகின்றன. கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதி (16 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

தமிழகத்தின் பிரபல சோதிடர் சிவல்புரி சிங்காரம்

எழுதும் இராகு கேது மாற்றம் உங்களுக்கு எப்படி?

# ...மைச்சர்கள் இருவர் ...து வீட்டுக்கு வந்தனர்

## ...ஸ்.பி.திஸநாயக்க தகவல்

(கொழும்பு)

...அமைச்சர்கள் இருவர் எனது ... உணவருந்திச் சென்றனர் ...தசியக் கட்சியின் தேசிய ...ஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தாவது,

ஆளும் தரப்பு அமைச்சர்கள் பலர் எதிர்க் கட்சிகளுடன் இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர். எதிர்வரும் தேர்தலில் இந்த அமைச்சர்கள் எதிர்க்கட்சிகள் சார்பில் போட்டியிடுவார்கள்.

...பில் ஊடகவியலாளருடன் ...வர் மேலும் தெரிவித்துள்ள

இதன் உண்மை குறித்து ஊடகவியலாளர்கள் என்னிடம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல்

# ஆதரவு தருமாறு பிள்ளையானிடம் ஜனாதிபதி மகிந்த கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது தமக்கு ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிழக்கு முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையானிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் அண்மையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி பூரண ஆதரவினை வழங்கும் என முதலமைச்சரின் இணைப்புச் செயலாளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார். (16 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்

தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus
MORE BRANDS-MORE CHOICE
யாழ் மண்ணின் பாரம்பரைத் தோழன்

(C-3343)

நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜெய்ப்பூர் பெற்றோலியக் கிடங்கில் வரலாறு காணாத தீ விபத்து

## தீயை அணைக்க முடியாததால் 5 இலட்சம் பேர் பாதிப்பு

(ஜெய்ப்பூர்)


ஜெய்ப்பூர் பெற்றோலிய சேமிப்பு கிடங்கில் ஏற்பட்ட தீ தொடர்ந்து கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. தீயணைப்பு படையினரும் இராணுவத்தினரும் தீவிரமாக போராடியும் நேற்று முன்தினம் வரை தீயை கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. இப்பயங்கர தீ விபத்தில் இந்தியன் ஒயில் நிறுவனத்தைச் சேர்ந்த ஆறு பேர் உட்பட ஒன்பது பேர் பலியாகியுள்ளனர். தீ விபத்து நிகழ்ந்த இடத்தைச் சுற்றியுள்ள ஐந்து இலட்சத்திற்கும் மேற் பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப் பட்டுள்ளனர்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள சீதாபுரம் பகுதியில் இந்தியன் ஒயில் நிறுவனத் திற்குச் சொந்தமான பெற்றோலிய சேமிப்பு கிடங்கு உள்ளது. இந்த கிடங்கிலிருந்து பெற்றோல் எடுத்துச் செல்லும் குழாயில் கடந்த வியாழக்கிழமை கசிவு ஏற்பட்டு இரவு 7.30 மணியளவில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ மளமளவென மற்ற பகுதிகளுக்கும் பரவியது.

பெற்றோல் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் வைத்திருந்த மற்ற டாங்குகளுக்கும் தாவி தொடர்ந்து கொழுந்து விட்டு எரிந்து வருகிறது. மொத்தமுள்ள 13 எரிபொருள் டாங்குகளில் ஐந்து டாங்குகள் தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கின்றன.

எரிந்து கொண்டிருக்கும் ஐந்து டாங்குகளில் இரண்டு டீசல் டாங்குகள் அவற்றில் ஒவ்வொன்றிலும் தலா 20 ஆயிரம் கிலோ லீற்றர் டீசல் இருந்தது. மற்ற மூன்று டாங்குகளில் தலா 10 ஆயிரம் கிலோ லீற்றர் பெற்றோல் இருந்தது. ஒரு கிலோ லீற்றர் என்பது ஆயிரம் லீற்றர் அளவாகும்.

பல பகுதிகளில் இருந்தும் வரவழைக்கப் பட்ட தீயணைப்பு வாகனங்கள், நுரையை பீச்சி




யடித்து தீயை அணைத்து வருகின்றன. இருந்தாலும் தீ இன்னமும் கட்டுக்குள் வரவில்லை.

இந்த பயங்கர தீ விபத்தில் இந்தியன் ஒயில் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மூன்று பேர், தொழிலாளர்கள் மூன்று பேர் உட்பட மொத்தம் ஒன்பது பேர் பலியாகியுள்ளனர். 150க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். தீ விபத்து குறித்து தகவல் அறிந்ததும் பெற்றோலிய அமைச்சர் முரளி தியோரா சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அதிகாரி களிடம் நிலவரங்களைக் கேட்டறிந்தார்.

அதன் பின் நிருபர்களிடம் பேசுகையில்,

தீ தானாகத்தான் அணைய வேண்டும். அதற்கு வேறு தீர்வு கிடையாது. தீ விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு இந்தியன் ஒயில் நிறுவனம் தலா 10 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கும். பலத்த காயம் அடைந்தவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாயும், லேசான காயம் அடைந்தவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்படும்.

தீ விபத்திற்கான காரணங்கள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழு அடுத்த ஆறு வாரங்களில் தன் அறிக்கையை சமர்ப்பிக்கும். தீயை அணைப்பதில் சிறப்பு வாய்ந்த குழுவினர் மும்பை மற்றும் டில்லியில் இருந்தும் வரவழைக்கப்பட்டுள்ளனர். மொத்தம் 150 கோடி ரூபாய் மதிப்புள்ள எரிபொருள் எரிந்து நாசமாகியுள்ளது என்றார். (ஓ-6)

# டயானாவின் கடிதம் ரூபா 62,000 க்கு ஏலம்



மறைந்த இளவரசி டயானா கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டையுடன் நன்றி தெரிவித்து எழுதிய கடிதம் ரூ. 62 ஆயிரத்துக்கு ஏலம் போனது. இளவரசி டயானாவுக்கு அவரது ஆடை வடிவமைப்பாளர் பால் புரூஸ், கிறிஸ்துமஸ் பரிசாக கடந்த 1988 ஆம் ஆண்டு டிசம்பரில் ஒரு பிளவுஸ் அனுப்பி இருந்தார். இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டையுடன் 20 ஆம் திகதி அவருக்கு டயானா ஒரு கடிதம் எழுதி இருந்தார். அந்த கடிதம் இப்போது பர்னடோ என்ற குழந்தைகளுக்கு உதவும் தொண்டு நிறுவனத்துக்கு ரூ. 62 ஆயிரம் ஈட்டித் தந்துள்ளது. லண்டனில் நடைபெற்ற பிபிசி2 நிகழ்ச்சியில் இந்த கடிதம் ஏலம் விடப்பட்டது.

எனக்கு எந்த ஒரு பார்சல் வந்தாலும் அதை உடனே பிரித்து விடுவேன். தாங்கள் அனுப்பிய கிறிஸ்துமஸ் பரிசை பிரித்துப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன். என் மீது இவ்வளவு அன்பு வைத்துள்ளீர்கள் என்பதை நம்பவே முடியவில்லை. பரிசு அனுப்பியதற்கு நன்றி என அந்த கடிதத்தில் டயானா எழுதி உள்ளார். நன்றி கடிதமும் தொண்டு நிறுவனத்துக்கு உதவி இருப்பதன் மூலம் அவரது ஆன்மா சாந்தி அடையும் என்று நம்புகிறேன் என ஆடை வடிவமைப்பாளர் புரூஸ் தெரிவித்தார். (ஓ-6)

# ஹோண்டுராஸ் நாட்டில் நீக்கப்பட்ட ஜனாதிபதி மீண்டும் பதவி ஏற்கிறார்

(டெகுசிகல்பா)

அமெரிக்கா அருகே உள்ள ஹோண்டுராஸ் நாட்டின் அதிபராக இருந்தவர் மானுவல் செலாயா. கடந்த ஜூன் மாதம் 28 ஆம் திகதி அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அவர் அந்த நாட்டில் இருந்து விமானம் மூலம் வெளிநாட்டுக்கு கடத்தப்பட்டார். புதிய அதிபராக மைக் கேல்லெட்டி பதவி ஏற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் செலாயா கடந்த மாதம் ஹோண்டுராஸ் நாட்டுக்கு திரும்பினார். அவர் பிரேசில் நாட்டு தூதரகத்தில் தஞ்சம் புகுந்தார். இந்த தூதரகத்தை ஹோண்டுராஸ் இராணுவம் முற்றுகையிட்டது.


இந்த நிலையில் செலாயாவை மீண்டும் பதவியில் அமர்த்தும்படி ஹோண்டுராஸ் நாட்டுக்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுத்தன. அமெரிக்க மூத்த அதிகாரிகள் 2 பேர் ஹோண்டுராஸ் நாட்டுக்கு விரைந்து சென்று செலாயாவை மீண்டும் ஆட்சியில் அமர்த்தும்படி கேட்டுக் கொண்டனர்.

சர்வதேச வற்புறுத்தல் காரணமாக ஹோண்டுராஸ் நாட்டு இராணுவம் செலாயாவை மீண்டும் பதவியில் அமர்த்த சம்மதித்தது. இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த இப்போது அதிபராக இருக்கும் மைக்கேல்லெட்டி தன் ஆதரவாளர்களை செலாயாவிடம் அனுப்பி வைத்தார். பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடந்த பின் செலாயா மீண்டும் ஜனாதிபதி யாக அமர்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. செலாயா இடதுசாரி தலைவர் ஆவார். அவர் தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் ஜனாதிபதி ஆனார். (ஓ-6)



## வட்டுக்கோட்டை -அராலி மேற்கு -கோட்டைக்காடு

### நொச்சியம்பதி அருள்மிகு சித்திவிநாயகப் பெருமான் ஆலய



# நவகுண்ட பக்ஷ புனருத்தாரண பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்-01.11.2009

### பிரதம பிரதிஷ்ட குருவின் ஆசிகள்




சிவதலங்களும்,தெய்வீகப் பதிகளும் நிறைந்து ஈழமணித் திருநாட்டில் சிகரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் சைவ அடியார்கள் நிறையப் பெற்ற வட்டுக்கோட்டை, அராலி கோட்டைக்காடு நொச்சியம்பதி பெருமானுக்கு இன்று குடமுழுக்கு வைபவம் நடைபெறுகின்றது. விநாயகப் பெருமான் இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னதாக கடலிலே மிதந்து வரக்கண்டு அடியவர்களால் எடுத்து வரப்பட்டு அர்ச்சனைக்கு உகந்த பத்திரமாகிய நொச்சி மரங்கள் நிறைந்து நிற்கும் இப் பகுதியில் சிறியதொரு ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்து வழிபட்டு உயர்வுகள் பெற்றார்கள். அடியவர்களை உயர்வுறச் செய்த விநாயகருக்கு அழகிய ஆலயம் அமைக்க எண்ணி ஊர் மக்கள் ஒவ்வொரு திருப்பணிகளாக செய்து கும்பாபிஷேகக் காலத்திற்கு காலம் 5க்கும் மேற்பட செய் துள்ளார்கள். இன்று நடைபெறு கும்பாபிஷேக விழா பொலிவுற அழகிய மூலஸ்தான விமானம், மணிக்கூட்டுக் கோபுரம், அழகுறு வசந்த மண்டபம் என்பன புதிதாக அமைந்துள்ளது. ஆலய பரிபாலன சபையினரதும், இளைஞர்களினதும் பெரும் முயற்சியால் எங்கும் இல்லாதவாறு வசந்த மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா,தமிழ் நாடு சிற்பக்கலைஞர் ஸ்தபதி புருஷோத்தமன் குழுவினரின் கை வண்ணத்தில் உருவாக்கப்பட்ட வசந்த மண்டபம் ,யாக சாலையும் ,பலவிதமான வேலைகள் விநாயகப் பெருமானின் பெருமையைக் காட்டி புராணக்கதையை தத்துவ ரூபமாக சிற்பங்களில் அமைவு அதற்கேற்ப அழகுற வர்ணங்கள் தீட்டிப் பார்ப்போர் மெய் சிலிர்க்க வைத்திருக்கிறார்கள்.

இந்து சமுத்திரத்தின் முத்துப்போல் வந்த விநாயகப் பெருமானுக்கு தல விருட்சம்,அழகிய தீர்த்தத் தடாகம், தலப்பெருமை அமைந்துள்ளது. இவ் ஆலயத்தில் 80ஆம் ஆண்டுக்குப் பின் நிகழ்வுற்ற மூன்று கும்பாபிஷேகங்களையும் பிரதம குருவாக இருந்து செய்து வைக்கும் பேற்றைத் தந்த நொச்சியம்பதி விநாயகப் பெருமானை கும்பாபிஷேகம் நிகழ்வுற்றும் இவ்வேளை பிரார்த்தித்து அனைவருக்கும் உயர்வைத் தரும் இவ் ஆலயம் பல திருப்பணிகள் கண்டு உயர வேண்டும். அனைத்து விநாயகப் பெருமான் அடியவர்களுக்கும் கும்பாபிஷேக திருவருள் கிட்ட நல்லாசிகள் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லோரும் இன்புற்று இருக்க பிராத்திப்போமாக.

**கலாநிதி கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் (J.P)**
**பிரதம குரு.**



இந்திய சிற்பக்கலைஞர் ஸ்தபதி கே.புருஷோத்தமன் -குழுவினர் கைவண்ணத்தில் உருவான வசந்த மண்டபத்தின் திவ்விய தோற்றம்

### பிரார்த்தனை உரை



வட்டுக்கோட்டை கோட்டைக் காடு-நொச்சியம்பதி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் இந்த விரோதி வருடத்தில் ஐப்பசித் திங்களில் நடைபெறுகின்றது. பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் என வேண்டுவார் வேண்டும் வரமீயும் பெருங்கடவுள் என போற்றப்படுபவர் விநாயகர்.

குடநீராட்டு, கும்பாபிஷேகம்,பெருஞ்சாந்தி விழா என்ற பதம் ஆலயங்களை புதிதாக நிர்மாணித்து அல்லது புனரமைத்து செய்யப்படுகின்ற கிரியையாகும். பன்னிரெண்டு ஆண்டுகளுக்கொரு முறை நடைபெறும் இந்தப் பக்தித் திருவிழாவானது கும்பாபிஷேகம் நடைபெறுகின்ற ஆலயத்திற்கு மட்டுமல்ல ஆலயம் அமைந்திருக்கின்ற கிராமத்துக்கும் பெரும் சிறப்புக்களை பெருக்குகின்றது எனவே எல்லாம் வல்ல ஆனைமுகப் பெருமானின் பெருங்கருணையை வியந்து கும்பாபிஷேகப்பெருவிழா சிறக்க பிரார்த்திக்கின்றேன்.

**வர்ணனைக் கலாநிதி**
**மதுரகவி காரை எம்.பீ.அருளானந்தன்**
**ஆசிரியர் ஸ்ரான்லிக் கல்லூரி**

மலர் அமைப்பு:
தில்லைநாதன் ரவீந்திரநாதன்
ஆசிரியர் .யா/ செங்குந்த இந்துக்கல்லூரி

### நல்லை, ஆதீன முதல்வரின் அருளாசியுரை



எல்லாம் வல்ல அருள்மிகு விநாயகப் பெருமான் சைவமும் தமிழும் தழைத்தோங்கி வரும் வட்டுக்கோட்டை கோட்டைக் காடு நொச்சியம்பதி எனும் திவ்விய ஷேத்திரத்தில் பன்னெடுங்காலமாக அருள் பாலித்து வருகின்றார்.

இதற்கு பெருமைகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் இத் திருப்பதியில் இன்றைய தினம் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழச்சியடைகின்றேன். வையத்துள் வாழ்வாங்கு வாழ எம்பெருமான் துணையை நாடுபவர்களுக்கு விநாயகர் அருள் செய்வார். பழம்பெரும் பதியில் குடியிருந்து அருள் ஆணை செய்தெமை வாழ்விக்கின்ற விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகம் சிறக்க எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சாரிய சுவாமிகள் நல்லை ஆதீனம்.**

### வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டை, அராலி மேற்கு, கோட்டைக் காடு நொச்சியம்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு விநாயகப் பெருமானுக்கு நவகுண்டபக்ஷ புனருத்தாரண பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று காலை 7.35 மணியளவில் நடைபெறுகின்றது.

இளைஞர்களினதும் பரிபாலன சபையினரதும் அயராத முயற்சியினால் கோயில் புதுப்பொலிவு பெற்று காட்சி தருவதுடன் பல நூற்றாண்டு பழமை கொண்ட இவ்வாலயத்தின் யாகசாலை, வசந்த மண்டபம் என்பன அழகுற இந்தியா, தமிழ்நாடு சிற்ப கலைஞர், ஸ்தபதி புருஷோத்தமன் குழுவினரால் அமைக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

தலம், தீர்த்தம், விருட்சம் ஒருங்கே அமையப் பெற்ற ஆலயத்தின் மூலமூர்த்தி சிறியதாக காணப்படினும் அதன் கீர்த்தியானது அனைவரையும் வியக்க வைப்பனவாகவுள்ளது. விநாயக அடியவர்களாகிய அனைவரும் ஆசார சீலர்களாக வேழமுகத்து விநாயகனின் கும்பாபிஷேகத்தில் கலந்து அவனருளை பெறுவோமாக .


**தில்லைநாதன் ரவீந்திரநாதன்**
**ஆசிரியர் செங்குந்த இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.**





யாழ். மாநகர சபையின் முதலாவது அமர்வின் ஆரம்ப விழா கடந்த புதன்கிழமை மாநகர சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, துணை முதல்வர் து.இளங்கோ மற்றும் அதிதிகளான யாழ். அரச அதிபர் க.கணேஷ், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் மதத்தலைவர்கள், நிகழ்வில் கலந்து கொண்டவர்களை அடுத்த இரு படங்களிலும் காணலாம்.

# பிரிஜ்ஜில் விளையும் காய்கறி



குளிர்சாதனப் பெட்டிகள் (பிரிஜ்) காய்கறிகள், உணவுப் பண்டங்களை பதப்படுத்தி வைக்க பயன்படுகிறது. தற்போது இதில் கால மாற்றத்துக்கேற்ப நவீனத்தை புகுத்தி சமையலுக்கு தேவையான காய்கறிகளை வளர்க்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது. காய்கறிகளை மட்டுமல்லாமல் கடல் உணவுப் பொருட்களான மீன், நண்டுகளையும் வளர்க்க முடியும்.


இந்த பிரிஜ் பல அடுக்குகளை கொண்டதாக இருக்கும். மேற்புறத்தில் உள்ள அடுக்குகளில் காய்கறிகளை வளர்த்துக் கொள்ளலாம். அதற்கு தேவையான வெப்பம் கிடைக்க வசதி செய்யப்படுள்ளது. அடிப்பகுதியில் உள்ள அடுக்கில் மீன்களை வளர்க்கலாம். மேல் உள்ள தாவரங்கள் வளர்க்கும் அடுக்கில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் கீழே வரும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளதால் மீன்களின் உணவுக்கு கவலைப்படத் தேவையில்லை.

மேலும் பயன்படுத்தியது போக உள்ள காய்கறி கழிவுகளையும் இதில் போட்டு வைத்தால் அதில் இருந்து எரிபொருளும் தயாரிக்கவும் முடியும். இதைக் கொண்டு ஒரு காரை இயக்க முடியுமாம்.

இந்த பிரிஜ்ஜின் பெயர் *ப்ருகல் பிரிஜ் பிலிப்ஸ்* நிறுவனம் இதை தயாரித்து உள்ளது. இனி நமக்கு தேவையான காய்கறிகளை வீட்டுத் தோட்டத்துக்கு பதிலாக சமையல் அறையிலேயே வளர்த்துக் கொள்ளலாம். இதனால் ஆரோக்கியமான காய்கறிகளையும், உணவுப் பொருட்களையும் நேரடியாகப் பெறலாம்.

மாறிவரும் வாழ்க்கை முறையில் வருங் காலத்தில் இது எல்லோர் வீட்டிலும் அத்தியாவசியமாகிவிடும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# அதிபுத்திசாலி 'எலி'



மருத்துவ விஞ்ஞானத்தில் தற்போது இரு துறைகள் முன்னிலை வகிக்கின்றன. அவற்றில் ஒன்று, எல்லாவித வியாதிகளுக்கும் தீர்வு காணும் திறன் கொண்ட ஸ்டெம் செல் சிகிச்சை முறை. மற்றொன்று வியாதியின் அடிப்ப டையை கண்டுபிடித்து அந்த நோய் மனித பரம்பரையிலேயே இல்லாமல் செய்யும் ஜெனிடிக் முறை.

மரபணு மாற்று முறையில் ஜீன்களில் செயற்கை தன்மையை புகுத்தி பல வியாதிகளுக்கு தீர்வுகாணும் முயற்சிகள் நடந்து வருகின்றன. தற்போது சீன விஞ்ஞானிகள் எலிக்கு ஜீன் மாற்றம் செய்து சில சிறப்பு பண்புகளை உருவாக்கி உள்ளனர்.

என்.ஆர்.2பி. எனப்படும் ஒரு வகை ஜீன்களில் மாற்றங்களை ஏற்படுத்தி இந்த எலி உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் மூளை செல்களான நீயூரான்களுக்கு இடையேயான தொடர்பு அதிவேகமாக உயர்ந்துள்ளது.

இந்த ஜீன்களின் வேகத்தை அல்ஜீமர் வியாதி பாதிப்பது தெரியவந்தது. அதற்கான மருந்தை செலுத்துவதன் மூலம் இந்த ஜீன்களின் வேகத்தை அதிகப்படுத்த முடியும். இதனால் இதன் நினைவுத்திறன் மற்றும் செயல்படும் வேகம் அதிகரிக்கிறது.

மருந்தின் அளவு அதிகப்படுவதற்கு ஏற்ப எலியின் செயல்படு வேகமும் பிரமிப்பைத் தருகிறது. விடயங்களை புரிந்து கொள்ளும் திறனும் அதிகரிக்கிறது. மற்ற பெண் எலிகளுடன் ஒப்பிடும் போது இதன் செயல்வேகம் 3 மடங்கு அதிகமாக இருப்பது தெரிய வந்துள் ளது.

இந்த அபூர்வ திறனுடைய எலி உருவாக்கத்தில் ஜோர்ஜியா மருத்துவக்கல்லூரியும் பங்கு கொண்டுள்ளது. ஏற்கனவே கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இதே ஜீன்களைக் கொண்டு அறிவுத்திறனை அதிகரிக்கும் சோதனை இதேகுழுவால் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


இப்போது யாழ்ப்பாணத்திலும் புரோட்பாண்ட் இணையம்



Dialog Homenet இணைப்பு ஊடாக வரையறையற்ற புரோட்பாண்ட் இணையப்பாவனை

- மாதாந்தக் கட்டணம் ரூ.1,750/-இலிருந்து
- இணைப்புக்கட்டணம் ரூ.8,000/-
- மொடம் தேவையில்லை
- தொலைபேசி இணைப்பு அவசியமில்லை
- ஆகக்குறைந்தது 3 இ-மெயில் பொதிகள் இலவசம்
- 10 MB வரையான வலைத்தளம்

அனைத்து Dialog வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Broadband

TRC/EC/ADT/DBB/09-02

Dialog

# அகதிகளை அழைத்துச் செல்ல ஆஸிக்கு ஒருவார அவகாசம்

## இந்தோனேசியா வழங்கியது

(கொழும்பு)

இந்தோனேசிய கடற்பரப்பில் உள்ள 78 இலங்கை அகதிகளை அங்கிருந்து அழைத்துச் செல்ல இந்தோனேசியா, அவுஸ்திரேலியாவுக்கு ஒருவாரகால அவகாசம் வழங்கியுள்ளது என்று இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலிய சுங்க கப்பல் ஒன்றினால் காப்பாற்றப்பட்ட மேற்படி அகதிகளின் விவகாரத்தினால், ஆட்சிக்கு வந்து ஒருவருடமே பூர்த்தியடைந்த அவுஸ்திரேலிய பிரதமர் கெவின்ரூட் மீது அரசியல் அழுத்தங்கள் கொடுக்கப் பட்டுள்ளன.

இந்நிலையில் அகதிகளை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல முடியாதென அவுஸ்திரேலியா கடந்த புதன்கிழமை வலியுறுத்திக் கூறியது.

விசாரணைக்காக அகதிகள் இந்தோனேசியாவுக்கு அழைத்துச்செல்லப் படுவார்கள்என்றும் அது தொடர்பில் இந்தோனேசியாவுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்நாடு தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, இந்தோனேசியாவின் றியாவ் தீவுக்கு அருகில் அகதிகளுடன் சென்றுள்ள அவுஸ்திரேலிய ஓசானிக் வைக்கிங் கப்பல் நவம்பர் மாதம் 6ஆம் திகதி மட்டுமே அங்கு தரித்துநிற்க அனுமதிக்கப்படும் என்று இந்தோனேசிய வெளிநாட்டமைச்சு பேச்சாளர் ரேகுபெஸாஸயா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இந்த காலகெடுவுக்குள் அவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் அல்லது இந்தோனேசிய கடற்பரப்பிலிருந்து வெளியேறிவிடவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தோனேசிய வெளிநாட்டமைச்சர் மார்டி நதலேகாவா வியாழக்கிழமை றொய்ட்டர் செய்திச் சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றில், இலங்கைத் தமிழ் அகதிகளை என்ன செய்வது என்பதை தீர்மானிப்பது அவுஸ்திரேலியாவை பொறுத்த விடயம் என சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# மிருசுவில் நலன்புரி முகாம் மாணவர்களில் பத்து பேர் புலமைப் பரீட்சையில் சித்தி

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 10 மாணவர்கள் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மாணவர்களிற்கு நடத்தப்பட்ட தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின.

இதில் மிருசுவில் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 41 மாணவர்கள் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்றுவந்தனர்.

இம் மாணவர்களில் 10பேர் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் எப்.ரி.எடிசன் அறிவித்துள்ளார்.

இதில் யஸ்ரின் குலாஸ் ஆன் பிரசன்னா-141, மனோகரன் மதனிகா-137, அன்ரனி கிளிரஸ் வினஸ் ஆன் குரூஸ்-131, அருந்தவராஜா கஜோதன்-127, சிதம்பரம் விஜய்-126, யாக்கோபு செல்வகுமார் பிறின்சிகா-126, மகேந்திரன் நாகசுதர்சன்-116, விமலகுமாரன் அஸ்வின்-114, குமரகுலசிங்கம் நிதுஷா-111, தில்லையம்பலம் செந்தூரன்-111 ஆகியோரே சித்தியடைந்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நிரந்தரமாகக் கல்வி கற்று வந்த 6 மாணவர்களில் இராஜ் அனற் சுதர்சிகா-147 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்.

ஏனையவர்களில் ஹென்றி மனோகரன் யூடிஸ் றஜித்தா-127, பற்குணராசன் டினேஸ்கான்-119, சிவபாலன் ஜசிந்தன்-108, தர்மகுலசிங்கம் மதுஷன்-106 மற்றும் குலசேகரம் தேனுசா-93 புள்ளிகளைப் பெற்றுள்ளனர். (ந-5)

# மனநோயாளி கொல்லப்பட்ட சம்பவம் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு விளக்க மறியல்

(கொழும்பு)


பம்பலப்பிட்டி கடற்பகுதியில் மனநோயாளி ஒருவர் தாக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை அடுத்த மாதம் 13ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று நீதவான் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பொலிஸ் கான்ஸ்டபிளுடன் பம்பலப்பிட்டிகடற்பகுதியிலிருந்த மற்றைய நபர்களை அடையாளம் காண்பதற்கான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கடலில் மூழ்கி உயிரிழந்தவரின் பிரேத பரிசோதனை நேற்று நடைபெற்றது. சடலத்தின் பாகங்களை மேலதிக பரிசோதனைகளுக்காக பேராதனை பல்கலைக்கழகத்தின் சட்ட வைத்திய பீடத்திற்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டதெனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் மதிவக்க குறிப்பிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக 40க்கும் மேற்பட்ட நபர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸ் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். (ந-3)

# யாழ்.வணிகர் கழகத்தின் கட்டிடம் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் புதிய கட்டிடத் தொகுதியை நேற்றுக் காலை 11மணிக்கு வண்ணிகர் கழகத் தலைவர் ஜனக்குமார் திறந்து வைத்தார்.

ஏற்கனவே மானிப்பாய் வீதியில் வணிகர் கழகக் கட்டிடத் தொகுதி இருந்தது.

இந்தக் கட்டிடத் தொகுதிக்குப் பின்னால் கட்டப்பட்ட புதிய கட்டிடத் தொகுதியே நேற்று திறக்கப்பட்டது.

பல லட்சம் ரூபாய் செலவில் வணிகர் கழகத்தினால் அமைக்கப்பட்ட இக்கட்டிடத் தொகுதிதிறப்பு விழாவில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வணிகர்கள் பலரும் பங்கு பற்றியிருந்தனர். (ந-5)

# இலங்.-பாகிஸ்தான் வர்த்தக உடன்பாடு

(கொழும்பு)

இலங்கைக்கும்-பாகிஸ்தானுக்கும் ஒரு பில்லியன் டொலர் வர்த்தக உடன்பாட்டை மேற்கொண்டுள்ளதாக பாகிஸ்தானை தளமாக கொண்ட ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையும் பாகிஸ்தானும் ஒரு பில்லியன் டொலர் வர்த்தக உடன்பாட்டை மேற்கொண்டுள்ளன. இந்த உடன்பாடானது ஒரு வருடத்திற்கு ஒரு பில்லியன் டொலர் வர்த்தக நடவடிக்கைகளை கொண்டது.

இலங்கையும் பாகிஸ்தானும் 2005ஆம் ஆண்டு சுதந்திர வர்த்தக உடன்பாடுகளை மேற்கொண்டிருந்தன.

அதன் பின்னர் இரு நாடுகளினதும் வர்த்தக நடவடிக்கைகள் 70 விகிதம் உயர்வை கண்டிருந்தது. எனினும் ஆண்டுக்கான வர்த்தகம் 300 மில்லியன் டொலர்களாகவே இருந்துள்ளது.

இலங்கையின் தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் இலங்கையில் இருந்து தேயிலையை கொள்வனவு செய்யவும் சீமெந்து ஏற்றுமதி செய்யவும் பாகிஸ்தான் இணங்கியுள்ளது. கடல் வளத்துறையில் இலங்கைபாகிஸ்தானுக்குரிய உதவிகளையும் கடற்போக்குவரத்தில் பாகிஸ்தானும் உதவிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# இருகை கூப்பி உயிர்ப்பிச்சை கேட்டவரைக் கொன்ற மாபாவம்

## கண்டித்து ஆர்ப்பாட்டம்-மனோ கணேசன்

(கொழும்பு)

கொழும்பு பம்பலப்பிட்டியில் மனநிலை பாதிக்கப்பட்ட பாலசுப்பிரமணியம் சிவகுமாரனை பல நூறு பேர் பார்த்திருக்க பட்டப்பகலில் அடித்து கடலில் தள்ளி கொலை செய்த காட்டுமிராண்டி அராஜகத்திற்கு எதிரான சாத்வீக கண்டன ஆர்ப்பாட்டத்தை எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் நடத்துவதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி முடிவு செய்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசியல், இன, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டு அனைத்து அரசியல் கட்சிகளும் சமூக நிறுவனங்களும், மனித உரிமை அமைப்புகளும் கலந்து கொள்ள வேண்டுமென ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் தெரிவித்துள்ளதாவது,

இந்நாட்டிலே இன்று இத்தகைய காட்டுமிராண்டி கலாசாரம் வேகமாக வளர்ந்து வருகின்றது. இந்த கொலை சம்பவத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸ் அதிகாரி ஒருவரே முன்னின்று இத்தகைய பாவ காரியத்தை செய்து முடித்திருப்பதை கண்டு முழு நாடுமே தலைகுனிய வேண்டியுள்ளது.

கையெடுத்து வணங்கி உயிர் பிச்சை கேட்ட 26வயது இளைஞனை அடித்து கடலில் தள்ளிய காட்சியை தொலைக்காட்சிகளில் செய் திப்படமாக பார்த்து அகில இலங்கையும் அதிர்ச்சியடைந்துள்ளது.

இந்த சம்பவத்தின் காரணமாக கைது இடம்பெற்று இருந்தாலும் இத்தகைய அராஜகப் போக்கை நாம் கண்டிக்காமல் அமைதியாக இருப்போமானால் இது தொடர்கதையாக மாறிவிடும். ஏற்கனவே அங்குலான பகுதியில் இரு இளைஞர்கள் பொலிஸ் அராஜகத்தால் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை நாம் மறக்கமுடியாது.

எனவே அனைத்துத் தரப்பினரும் தங்களது வழமையான கடமைகளை ஒத்திவைத்துவிட்டு எதிர்வரும் புதன்கிழமை 4ஆம் திகதி பகல் 12.00மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஒன்றுகூடி எமது சாத்வீக எதிர்ப்பை தெரிவிக்கவேண்டும்.

மேல்மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரகுமான் தலைமையிலான முஸ்லிம் உரிமைகள் இயக்கம் உட்பட பல்வேறு அமைப்பினர் தமது ஒத்துழைப்பை இந்த அராஜகத்திற்கு எதிரான நமது ஆர்ப்பாட்டத்திற்கு வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரும் மாகாணசபை உறுப்பினருமான எஸ்.இராஜேந்திரன் தெரிவித்தார். (ந-5)


**வீடும் காணிகளும் விற்பனைக்கு**

*புன்னாலைக்கட்டுவன் சந்திக்கருகில் 53 பரப்பும், 21 பரப்புக்காணியும், கோண்டாவில் டிப்போ பிரதான வீதிக்கருகில் 5 பரப்புக் காணியில் அமைந்துள்ள பெரிய வீடும், கடைத்தொகுதியும், அளவெட்டி அணிஞ்சலடிப்பிள்ளையார் கோயிலுக்கருகில் 5 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.*

தொடர்புகளுக்கு: 021-300-7840 (மாலை 5 மணிக்குப் பின்னர்)

(3872)

**ஐங்கரன் திருமண சேவை**

மணமகள் தேவை

எங்களிடம் யாழ்.இந்து உயர்குலம் U.K Citizen 32,35,37,41வயது, Canada Citizen 31,35 வயது (றோமன் கத்தோலிக்கம் R.C), America Green Card 36 வயது, Holand 33 வயது, France Citizen 28 வயது ( றோமன் கத்தோலிக்கம் R.C), 35 வயது, ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை. 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு.

தொடர்பு :- லண்டன் ஐங்கரன்
T.P No. 0044 7535384166
0044 7508295863
Fax No: 0044 2086720673

மணமகன் தேவை

எங்களிடம் யாழ்.இந்து உயர்குலம் 35 வயது (Electrical Engineear), U.K Student Visa 23, 25,29 வயது Austerliya Citizen 30 வயது (Doctor), Canada Citizen 30 வயது (Account) ஆகிய மணமகள்மார் உள்ளனர். தகுந்த மணமகன்மாரை எதிர் பார்க்கின்றனர். பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை. 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு.

தொடர்பு :- லண்டன் ஐங்கரன்
T.P No. 0044 7535384166
0044 7508295863
Fax No: 0044 2086720673

(3869)

**வீடு வாடகைக்கு**

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:-
0774277187

(3871)

**தோட்டக்காணி விற்பனைக்கு**

அளவெட்டி டச்சு றோட்டில் எட்டுப் பரப்பு தோட்டக்காணி விற்பனைக் குண்டு.

0772985314

(3866)

# அபிவிருத்திப் பாதையில் யாழ் மாவட்டம்

## ஒரு கிராமத்திலிருந்து சுமார் நூறு தனிநபர் வீதம் சுமார் 1600 குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றனர்

*கிருஷ்ணி கந்தசாமி இ:பாம் - ஆர்த்தி பாக்கியநாதன்*



கிராமங்கள் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் காணப்படுகிறது. நகரங்கள் தோற்றம் பெறுவதற்கு முன்னரே மக்கள் பல்வேறு வசதிகளுடனும் பொருளாதார வளங்களுடனும் வாழ்ந்த கிராமங்கள் குறித்து இன்றும் நாம் வரலாற்றில் காணக்கூடியதாக இருக்கிறது.

பாரம்பரிய பழக்கவழக்கங்கள் மற்றும் தொழில்களைக் கட்டிக் காப்பதில் மிக அக்கறை காட்டுபவர்களில் யாழ். மாவட்ட கிராமங்களில் வாழும் மக்கள் முக்கிய இடம்பெறுகின்றனர். அம்மாவட்ட மக்களது பாரம்பரியத் தொழில்களை அபிவிருத்தி செய்து அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான திட்டங்களை கிராமிய அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு பிரதேச செயலகத்திலுமுள்ள கிராமங்களில் இயங்கும் அபிவிருத்திச் சங்கங்களினூடாக உற்பத்திக்கான திட்டங்கள் பற்றிய விபரங்களை தருமாறு பிரதேச செயலாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதையடுத்து பெற்றுக் கொள்ளப்பட்ட விபரங்களுக்கமைய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிராமிய அபிவிருத்தி அமைச்சின் கிராமிய அபிவிருத்தி விசேட நிபுணர் மஹிந்த அகலவத்த தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 14 பிரதேச செயலகப் பிரிவுகள் காணப்படுகின்றன. அப்பிரதேச செயலகங்களின் கீழுள்ள கிராமங்களின் வளங்களுக்கேற்ப அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசேடமாக பிரதேசத்திலேயே விளையும் பயிர்கள், பழங்களைக் கொண்டு வருமானத்தை ஈட்டும் வகையில் இந்தத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திராட்சைப் பழச்சாறு உற்பத்தி, தானியங்களைத் தூளாக்கி பைக்கட்டுக்களில் அடைத்தல், சீமெந்து கற்கள் மற்றும் சீமெந்துப் பொருட்கள் உற்பத்தி, இறால் உற்பத்தி மற்றும் பதப்படுத்தல் போன்ற திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோன்று தெல்லிப்பளையில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை தயாரிக்கும் திட்டமும், கயிறு திரித்தல், ஊதுபத்தி மற்றும் கற்பூரம் தயாரிக்கும் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

உள்நாட்டுப் பிரச்சினைகள் காரணமாக வடக்கு கிராம மக்கள் ஏற்கனவே பொருளாதார ரீதியில் நலிவடைந்த நிலையில் உள்ளனர். அவர்களுக்கு உற்பத்திக்கான உதவித் தொகை வழங்கப்படுகிறது. எனினும், நூற்றுக்கு 20 வீதம் பயனாளிகளது பங்களிப்பு அவசியமென்பது அமைச்சின் கட்டாய நிபந்தனையாகும். ஒரு கிராமத்திலிருந்து சுமார் 100 தனிநபர் வீதம் சுமார் 1600 குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர்.

> ★ திராட்சைப் பழச்சாறு உற்பத்தி, தானியங்களைத் தூளாக்கி பைக்கட்டுகளில் அடைத்தல், சீமெந்து கற்கள் மற்றும் சீமெந்து பொருட்கள் உற்பத்தி, இறால் உற்பத்தி மற்றும் பதப்படுத்தல் போன்ற திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன

இதேவேளை மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பான செயற்பாடுகளும் முன்னெடுக்கப் படுகின்றன. மீன்பிடிக்கு போடப்பட்டிருந்த தடைகள் தற்போது யாழ். மாவட்டத்தில் முற்றாக நீக்கப்பட்டுள்ளன.

24 மணிநேரம் மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் படகுகள் மற்றும் ஏனைய உபகரணங்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் மீனவர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

கழுவுதல், காயவைத்தல் போன்றவற்றுக்கான கட்டிடமொன்று தற்போது அமைத்துக் கொடுக்கப்பட்டு வருவதாகவும் மின் வசதி, அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுத்தல், பிடித்த மீன்களை பாதுகாப்பதற்கான குளிரூட்டல் வசதிகளுடன் கூடிய அறைகளை அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பிடிக்கும் மீன்களை உடனடியாகக் கொழும்புக்கு கொண்டு வருவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

அரச அனுமதியுடன் தினமும் குளிரூட்டப்பட்ட வாகனங்களின் ஊடாக கொண்டு செல்லப்படுகின்றமையால் மீனவர்கள் இலாபத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது என்று யாழ். கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கந்தையா தர்மலிங்கம் தெரிவித்தார்.

நன்னீர் மீன் வளத்தை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசேடமாக மிதிவெடிகள் அகற்றப்பட்ட நீர் உள்ள குளங்களில் நன்னீர் உற்பத்தியை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் மிதிவெடிகள் அகற்றப்பட்ட அனைத்து குளங்களுக்குள்ளும் மீன் குஞ்சுகள் வளர்க்கப்படவுள்ளன என்றும் நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ள அனைத்து மக்களும் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்கு இது சந்தர்ப்பமாக அமையும் என்றும் அமைச்சர் கருத்துத் தெரிவித்தார்.



# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்

# 27.10.2009 முதல் 08.06.2011 வரை



## கன்னி

**உத்தரம் 2 ,3 ,4 ஆம் பாதங்கள் , அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்**

**அனுபவ அறிவால் அனைவரையும் கவர்ந்திழுக்கும் கன்னி ராசி நேயர்களே!**

தோற்றப்பொழிவை வைத்து உங்களை எடை போட முடியாது. துருவித்துருவி ஆராயும் எண்ணம் உங்களுக்கு உண்டு. மாற்றுக் கருத்துக்களை யாரேனும் சொன்னால் மறு நிமிடமே அவர்களை விட்டு விலகி வந்து விடுவீர்கள். பாட்டி காலத்து பழக்க வழக்கங்களையெல்லாம் மனதில் பதித்து வைத்துக் கொண்டு கேட்டவர்களுக்கெல்லாம் எடுத்துச் செல்வீர்கள். பொறுமைக்கு இலக்கணமாகத் திகழும் உங்களுக்கு பெருமை அதிகம் உண்டு.

யாரும் ஒரு காரியத்தைச் செய்தால் மனம் திறந்து பாராட்டுவீர்கள். ஒத்துழைப்புச் செய்வதற்கு கன்னி ராசிக்காரர்களே வேண்டும் என்று உலக மக்கள் விரும்புவர். காரணம் கடைசி வரை இருந்து காரியத்தை முடித்துக் கொடுப்பர். உதவி செய்வதில் பிரியம் வைத்த உங்களுக்கு ஒரு சில சமயங்களில் பதவிகள் வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள்.

கணிதத்தில் தேர்ச்சி பெற்ற நீங்கள் புனிதமானவர் என்று மக்களால் போற்றப்படுவீர்கள். எப்படியும் வாழலாம் என்று நினைப்பவர்களுக்கு மத்தியில் இப்படித்தான் வாழ வேண்டும் என்று நினைக்கும் உங்களுக்கு இந்த ராகு கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களைக்கொடுக்கப்போகின்றது என்பதைப் பற்றிப்பார்ப்போம்.

**நான்காம் இடத்து ராகு நற்பலன்களைக் கொடுத்திடுமா?**

**10ஆம் இடத்து கேது பதவியினைக் கொடுத்திடுமா?**

இதுவரை மகர ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும் கடக ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வழிப்பயணத்தில் 27.10.2009 அன்று பின்நோக்கிச் சென்று உங்கள் பிரச்சினைகளுக்கு வடிகால் அமைக்கப் போகிறார்கள்.

4ஆம் இடத்து ராகு நன்மைகளைக் கொடுக்குமா? வீண் விரயங்களை வழங்குமா? வீடுவாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்குமா? ஆடி ஓடித்திரிந்த உடம்பில் ஆரோக்கியம் குறையுமா ? கோடி கோடியாய் சம்பாதிக்க முடியுமா? என்றெல்லாம் நினைத்திருந்த உங்களுக்கு நாடி வந்த ராகு நற்பலன்களைக் கொடுக்க வேண்டுமானால் நாள் பார்த்து கோல்களை வழங்க வேண்டியது அவசியமாகும்.

பொதுவாக அலைச்சல் அதிகரிக்கும். ஆதாயம் எதிர்பார்த்தபடி கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். உழைப்பிற்கு ஏற்ப பலன்கள் கிடைப்பதில் சிறு குறை ஏற்படலாம். உத்தியோகத்தில் மாற்றம் ஏற்படலாம். நினைத்த நேரத்தில் நினைத்த காரியத்தை செய்ய முடியவில்லையே என்ற கவலை மேலோங்கும். நிகழ்காலத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

விரயங்கள் சுப விரயமாகவும் வீட்டுக்குள் பிரச்சினைகள் தலை தூக்காமல் இருக்கவும் ஆரோக்கிய பாதிப்பிற்கு அதிகத் தொகை செலவிடாமல் இருக்கவும், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் இருக்கவும் உங்கள் சுய ஜாதகத்தில் ராகு –கேதுக்கள் இருக்குமிடம் அறிந்தும் அதன் பாதசாரம் மற்றும் பார்க்கும் கிரகத்தின் நிலையறிந்தும் அதற்குரிய யோகபலம் பெற்ற நாளில் சர்ப்பசாந்திப் பரிகாரங்களை முறையாகச் செய்து கொள்வது நல்லது.

பூமிக்குரிய இடத்தில் ராகு சஞ்சரிப்பதால் இடம் வாங்கும் வாய்ப்புகளும் வீடு கட்டிக் குடியேற வேண்டும் என்ற எண்ணமும் உங்கள் உள்ளத்தில் குடிகொள்ளும். அலைச்சலைக் குறைத்து ஆதாயத்தை பெருக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், வாகனத்திருத்தச் செலவுகள் அதிகரிக்கும், குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க ஒருவருக்வொர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் பணியில் ஏற்பட்ட தொய்வு அகலும், கட்டாய ஓய்வு பெற்ற பிறகும் கூட மீண்டும் உங்களை வேலையில் அமர்த்த முன்வருவர். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், அடுத்தவரை நம்பிச் செய்த சில காரியங்களில் வெற்றி கிடைக்கும், நண்பர்களுக்கு நாளைக்கே நிறைவேற்றுகிறேன் என்று வாக்குறுதி கொடுக்க வேண்டாம். கேது பலம் பெறுவதால் பழைய நண்பர்கள் விலகிப் புதிய நண்பர்கள் வந்திணைவர்.

பொருள்தார வசதி பெருகும். இந்த நேரத்தில் புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தாயின் உடல் நலத்தின் பாதிப்பு ஏற்பட்டு அகலும். விலங்கு வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். நடந்து வரும் கூட்டுத் தொழிலை மாற்ற நினைப்பவர்கள் இப்பொழுது புதியவர்களின் அறிமுகத்தோடு பொன்னான பாதையை அமைத்துக்கொள்வர்.

ஒக்டோபர் 27என்பது உங்கள் மனதில் பதிந்து வைத்துக்கொள்ள வேண்டிய நாள். அன்றைய தினம்தான் ராகு என்ற மாபெரும் கிரகம் உங்கள் ராசிக்கு நான்காமிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது சூரியனின் சாரம் பெறுகிறார். சூரியன் உங்கள் ராசிக்கு விரயாதிபதி ஆகிறார். எனவே பயணங்களையும் சுகபோகச் செலவுகளையும் அதிகரிக்கச் செய்யும், திடீர் இடமாற்றங்களைக் கொடுக்கும், தெய்வ தரசினத்திற்காக நேரங்களை ஒதுக்குவது நல்லது. கட்டிய வீட்டைத் திருத்த எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

தாய்வழி உறவினர்களில் உங்களுக்குத் தக்க விதத்தில் ஒத்துழைப்பு கொடுக்க முன் வருவர், வங்கி சேமிப்பு உயரும், அரசு . வழியில் செலவுகள் வந்து சேரலாம், அரசியல் வாதிகள் உங்களுக்கு அருகில் இருந்து சில காரியங்களை முடித்துக்கொடுப்பர், ராகுவின் பார்வை பலத்தால் கடன் சுமைகள் குறையும்,அதேசமயம் புதிய கடன்களும் வந்து சேரலாம்.

வியாபார விருத்திக்கு புதிய பங்குதாரர்களை இணைத்துக்கொள்வது பற்றி ஆலோசனை செய்வீர்கள், கெட்டி மேளம் கொட்ட வைக்கும் வாய்ப்பு கிட்ட வந்தும் நழுவி விட்டதே என்று கவலைப்பட்டவர்கள் இனி கவலைப்பட வேண்டாம். 4இல் சஞ்சரிக்கும் ராகு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும் எனவே செயல்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். செய்யும் காரியங்கள் விரைவாக முடிவதற்கு அடுத்தவரை அனுசரித்துச் செல்வது நல்லது.

அதேசமயம் புனர்பூச நட்சத்திரக் காலில் வியாழன் சாரத்தில் சஞ்சரிக்கத் தொடங்குகிறார். 26.05.2010 வரை குரு காலில்தான் கேது சஞ்சரிக்கிறார். பாம்பு கிரகங்கள் நிழல் கிரகங்கள் என்று வர்ணிக்கப்படுகின்றன. அவை நிற்கும் வீட்டைப் பொறுத்தும் பலன் கொடுக்கும். அது மட்டுமல்ல அதைப் பார்க் கும் கிரகத்தைப் பொறுத்தும் பலன் கொடுக் கும்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது களத்திர ஸ்தானத்திற்கும் நான்காமிடத்திற்கும் அதிபதியாக விளங்கும் குருவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது களத்திர ஒற்றுமை மேலோங்கும், கல்விக்காக எடுத்த முயற்சிகளில் கடல் தாண்டும் வாய்ப்புகள் கூட ஒரு சிலருக்கு கிடைக்கலாம், வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்து சேரும், கொடி கட்டிப் பறந்த குடும்ப பிரச்சினைகள் படிப்படியாக குறையும், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்வீர்கள். பயணங்கள் அதிகரிக்கும், பக்க பலமாக இருக்கும் உறவினர்கள் உங்களை விட்டுவிலகினாலும் பக்க்த்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு உங்களுக்கு கிடைக்கும்.

பொதுவாக கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகத்தின் சாரத்தில் பாம்பு கிரகங்கள் நிற்கும் பொழுது நன்மையும் தீமையும் கலந்தே வழங்குவார். பிள்ளைகளை அவர்கள் போக்கில் போக விடாமல் பாதுகாத்துக் கொள்வது நல்லது. கூட்டாளிகளால் குழந்தைகளின் குணம் மாற நேரிடலாம்.

30.09.2010 முதல் 8.06.2011 வரை மூலம் நட்சத்திரத்தில் கேது காலில் ராகு சஞ்சரிக்கிறார். அதே நேரத்தில் 3 , 8க்கு அதிபதியான செவ்வாயின் காலில் கேது சஞ்சரிக்கத் தொடங்குகிறார். சொந்த பந்தங்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் வன்மைகளை வரழைத்துக்கொள்ளலாம். வீடு கட்டும் முயற்சியில் காட்டிய ஆர்வம் குறையும். பாதியில் நின்ற பணியை எப்பொழுது தொடரலாம் என்று சிந்திப்பீர்கள்.

மருத்துவச் செலவுகள் கூடும், நரம்பு எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டு அகலும், உடன்பிறப்புகள் வழியில் வரும் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்வது நல்லது, கொடுக்கல் வாங்கல்களில் சில இழப்புகள் ஏற்டலாம், பாக்கிகள் வசூலாகாமல் நின்று பரிதவிப்பை கொடுக்கும், கூட்டாளிகள் உங்களை முன்னால் புகழ்ந்து விட்டு பின்னால் உங்களைப்பற்றி குறை கூறுவர். விலை உயர்ந்த பொருட்களை கையாளுவதில் கவனம் தேவை. ஆதியந்தப் பிரபு வழிபாடும் அனுமன் வழிபாடும் உங்களுக்கு இக்காலத்தில் நல்ல பலன்களை வரவழைத்துக் கொடுக்கும்.

29.10.2009 முதல் 29.09.2010 வரை பூராட நட்சத்திரத்தில் சுக்கிரன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக பொருளாதார வசதி பெருகும், புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும், அருளாளர்களின் தொடர்பால் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்வீர்கள், குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும், குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை மாறும், கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறத் தொடங்கும்.

அதேசமயத்தில் புனர்பூச நட்சத்திரத்தில் வியாழன் காலில் கேது சஞ்சரிக்கிறா். மே 2010க்கு மேல் *திருவாதிரை* நட்சத்திரத்தில் ராகு காலில் கேது சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக தொழிலில் இருந்த கூட்டாளிகள் விலக நேரிடலாம், புதிய பங்குதாரர்கள் வந்திணைவர், புகழ் மிக்கவர்களிடம் வேலைக்குச் சேரும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும், ஜென்மச் சனியின் ஆதிக்கமும் இருப்பதால் நன்மைகளை வழங்க நம்பிக்கையோடு காத்திருப்பது நல்லது, நூதனப் பொருட் சேர்க்கை உண்டு. நோய் நொடிகளில் இருந்து விடுபட தென்முகக் கடவுளையும் விநாயகப் பெருமானையும் வழிபட்டு வருவது நல்லது.

சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் சுகங்கள் வந்து சேரவும் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் தொல்லைகள் எல்லையை விட்டுச் செல்லவும் வாரம் தோறும் சக்கரத்தாழ்வாரை வழிபட்டு வாருங்கள்.

சுய ஜாதகத்தில் பாம்பு கிரகங்களின் பலமறிந்து முறையாக சர்ப்ப சாந்திகளைச் செய்து கொள்வதோடு முன்னேற்றங்கள் வந்து சேர ராகு- கேதுக்களை வழிபட்டு வாருங்கள், யோக வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். (தொடரும்)

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

---

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைக்காவிட்டால் பாதிப்பில்லை

## மத்திய வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை தொடர்ந்து செயற்பாட்டில் இருப்பது சிறந்தது என்ற போதிலும், ஏதோவொரு காரணத்தினால் அந்த வரிச்சலுகை இல்லாமல் போகுமானால் அந்தப் பாதிப்பை எதிர் கொள்ள இலங்கைக்கு முடியும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை மத்திய வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை தொடர்பாக புதிய நிலைமைகளைத் தெளிவுபடுத்துவதற்காக இந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை எமக்கு அவசியமாகும்.எனினும், ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை இல்லாமல் இலங்கையின் தொழிற்துறை முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். ஏற்கனவே பல்தரப்பு வர்த்தக உடன்படிக்கை இரத்தானது போல் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை இன்றியும் இலங்கை முன்னோக்கிப் பயணிக்க முடியும்.

ஜீ.எஸ்.பி.பிளஸ் இல்லாமல்போவது உலகத்தின் இறுதி முடிவல்ல எனவும் கப்ரால் கூறியுள்ளார். 2008 நவம்பர் 2009 ஜனவரி ஆகிய இடைப்பட்ட காலத்தில் யூரோ மற்றும் பிரித்தானிய பவுண் ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது ரூபாயின் மதிப்புக் குறைவடைந்த போதிலும் இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் ஐரோப்பிய சந்தையில் போட்டியுடன் கூடிய வகையில் வர்த்தக நடவடிக்கைகளில் நிலைத்திருந்தனர் என அவர் கூறினார். (ச-5)

---

# யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் யாழ்.செயலகத்திற்கு வாகனம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள யாழ்.மாவட்ட மக்களை துரிதமாக மீள் குடியமர்த்துவதற்காக யாழ். செல்வதற்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் இரண்டு லாண்குளோசர் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

யாழ் செயலக அலுவலர்கள் மீள் குடியமர்த்தல் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதற்காக வாகன வசதி செய்து தருமாறு யாழ் .அரச அதிபர் க.கணேஷ் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இவ் லாண் குளோசர் வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

, இதன் மூலம் யாழ். செயலக அலுவலர்கள் வவுனியாவுக்கு இலகுவாக பயணத்தை மேற்கொள்ள முடியும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச-5)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகத்தினால் வலுவற்றோருக்கான கணனிப் பயிற்சிக் கூடம் மற்றும் உடல் நல வலுவூட்டற் பயிற்சி சாதன மண்டப ஆகிய கட்டடங்களின் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு16/2 சீனியர் ஒழுங்கை கலட்டியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். ஐ.ஓ.எம். நிறுவனத்தின் தலைமை அதிகாரி நிக்கொலின் சாமிநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-3)

# விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். டி. எம்.ஐ. கணனி கல்வி நிறுவனத்தின் கணனி கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யூனியன் அஸ்யூரன்ஸ் நிறுவன வட வலய முகாமையாளர் சி. என். மதிவதனன் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-4)

# யாழ் மாவட்டத்தில் மூன்று பேக்கரிகளில் தயாரிப்பு வேலைகள் தற்காலிக இடைநிறுத்தம்

## உயர் நீதிமன்ற நீதிபதி கட்டளை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர முதல்வரும் யாழ். மாநகர உணவு அதிகாரியுமான திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவின் பணிப்புரைக்கமைய யாழ். மாநகர சபையின் பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் க. ஆ. ஜீவநாதன் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாநகரப் பகுதியில் அமைந்துள்ள பதினொரு (11) (வெதுப்பகம்) பேக்கரிகளில் திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர். இக்குழுவில் மாநகர பொது சுகாதார பரிசோதகர்களாகிய என். இரகுமார், எம் விஜயகுமார், எஸ். முகுந்தன், வை. வசீகரன் ஆகியோர் அடங்குவர்.

இதில் எட்டு (08) நிலையங்களில் காணப்பட்ட குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டு, உரிமையாளர்களால் இக் குறைபாடுகள் இரண்டு கிழமைகளுக்குள் பூரணமாக நிவர்த்தி செய்யப்படல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய மூன்று (03) நிலையங்களில் பாண் மற்றும் ஏனைய உற்பத்திகளை மேற்கொள்வதற்காக மனித பாவனைக்குதவாத வண்டுகள், புழுக்கள் நிறைந்த துர்நாற்றம் வீசும் கோதுமை மாவு மொத்தம் 689 (50 கி.கி) மூடைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனால் இம்மூன்று பேக்கரிகளுக்கும் எதிராக யாழ். மாநகரப் பிரதம பொது சுகாதாரப் பரிசோதகரால் யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கை உடன் விசாரணை செய்த யாழ். உயர் நீதிமன்ற நீதவான் வசந்த சேனன் இதனை எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை விசாரணைக்கு எடுப்பதாகவும் அந்நாள் வரை குறிப்பிட்ட 689 மூடை மாவையும் நீதிமன்ற அனுமதியின்றி எதுவித பாவனைக்கோ அன்றி விநியோகத்துக்கோ பயன்படுத்தக் கூடாதென்றும், பாண் தயாரிப்பையும் தற்காலிகமாக இடைநிறுத்துமாறும் கட்டளை பிறப்பித்துள்ளார்.

அத்துடன் 4 ஆம் திகதி புதன்கிழமை யாழ். மாவட்டச் செயலக திட்டப் பணிப்பாளரையும், மற்றும் பேக்கரி சங்கங்களின் தலைவர்களையும் நீதிமன்றில் ஆஜராகும் படியும் கட்டளை பிறப்பித்துள்ளார் என யாழ் மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார். (ஓ)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்துடன் இணைந்து வழங்கும் க.பொ.த (உயர்தர) உயிரியல் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-3)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கலை இலக்கிய வட்டம் நடத்தும் செல்லையா குமாரசாமியின் 'மாங்கனி' சிறுவர் பாடல்கள் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி க. தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ் சொற் செல்வர் ஆறு திருமுருகன் கலந்து சிறப்பிப்பதுடன் நூல் வெளியீட்டுரையை எழுத்தாளர் கே.எஸ். ஆனந்தன் நிகழ்த்தவுள்ளார்.

நூலின் முதற் பிரதியை பெசன் கவுஸ் உரிமையாளர் த. கந்தசாமி பெற்றுக் கொள்ளவுள்ளார். (ஓ-4)

# புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

(அல்வாய்)

திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் இருந்து 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் மூவர் சித்தியடைந்துள்ளனர்.

விபரம் வருமாறு,

ச. திவ்வியா - 157, சி. கோசலா - 155, ஜெ. ஜெயசுதா - 151. (ஓ-4-19)

# இராசி பலன்

01.11.2009
(ஐப்பசி 15, ஞாயிற்றுக்கிழமை)
சதுர்த்தசி பின்னிரவு 2.08 மணிவரை
ரேவதி முன்னிரவு 8.06 மணிவரை
இராகுகாலம் 4.33 - 6.03 மணிவரை
சுபநேரம் 9.03 - 10.33 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | ஆழ்ந்த சிந்தை, போசன சுகம், நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு. |
| இடபம் | அமைதிக்குறைவு, பிரயாணம், முயற்சி தாமதம், உற்சாகம். |
| மிதுனம் | எடுத்த காரியம் கைகூடும், தன்னம்பிக்கை, கலந்துரையாடல், விருந்து பசாரம். |
| கடகம் | தொழில் சிந்தை, கௌரவமான நிலை, தேகநலன், நல்ல செய்தி. |
| சிங்கம் | உணர்ச்சி வசப்படல், பிரயாணம், தந்தைவழி உறவு, பெரியோர் சந்திப்பு. |
| கன்னி | எதிர்பாராத பகை, ஆரோக்கியக் குறைவு, போசன நன்மை, பிறருக்கு உதவுதல். |
| துலாம் | களஸ்திரநன்மை, தெய்வதரிசனம், உற்சாகம், பொருள் வருவாய். |
| விருச்சிகம் | நண்பர்கள் உதவி, புதிய முயற்சி, போசன சுகம், சுபநிகழ்வு. |
| தனுசு | புத்திரரால் கவலை, தனவிரயம், பெரியோர் உதவி, சிறுவியாதி. |
| மகரம் | நிலைமாற்றம், மாதாசுகம், நண்பர்கள் சந்திப்பு, மனச்சஞ்சலம். |
| கும்பம் | கூட்டு முயற்சி, செல்வாக்கு, வாகன சுகம், அந்நியர் சந்திப்பு. |
| மீனம் | விவாதம், காரியதாமதம், கௌரவக் குறைவு, தனவிரயம். |

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## பாராட்டு

"உங்களிடம் இருந்து நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது."

"நீங்க எதைச் சொல்றீங்க?"

"குறிப்பாக அடுத்தவர்களைப் பாராட்ட வேண்டும் என்று நீங்கள் நினைக்கும் போது அவர்களுடைய கையைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்குகிறீர்கள் பாருங்கள். அந்த விதம். ஒரு தனிரகம்."

"உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா? கை குலுக்கும் போது மூன்று விரல்களை மட்டும் கொடுப்பார்கள் சிலபேர். அவர்களெல்லாம் மனம் விட்டுப் பேச மாட்டார்கள்."

"இரண்டு கைகளாலும் சேர்த்துப் பற்றி குலக்குபவர்களும் உண்டு. அதிகமான அன்பை இது காட்டுகிறது."

"சிலபேர் பட்டும் படாமலும் கை கொடுப்பார்கள். விருப்பமில்லாதது மாதிரி! இவர்கள் தன்னலத்துக்காக எதையும் செய்யக் கூடியவர்கள்."

'கையை அழுந்தப் பற்றிக் குலுக்குபவர்கள் இருக்கிறார்கள். பாருங்கள்... அவர்களை நம்பலாம்."

"ஓ... இதில் இவ்வளவு விடயம் இருக்கிறதா? இருந்தாலும் நீங்கள் கை குலுக்கும் விதம் இதையெல்லாம் விட மேலானது சேர்"

"அப்படியா?"

"ஆமாம். நேற்று நான் உங்களிடம் வந்தேனே ஞாபமிருக்கா?"

"ஆமாம். புதிய தொழில் தொடங்கப் போவதாக சொல்லி என்னை ஆசீர்வாதம் பண்ணச் சொன்னீங்க. பண்ணி னேன்."

"அப்பொழுது என் கையை அழுத்தமாகப் பிடித்துக் குலக்கி நல்லா இரு என்று சொன்னீர்களே... ஞாபகமிருக்கா?"

"ஆமாம்."

"அது சம்பந்தமாகத்தான் இப்பொழுது மறுபடியும் நான் வந்திருக்கிறேன்."

"இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும். சொல்லுங்கள் செய்கிறேன்."

"வேறொன்றுமில்லை இப்பொழுது உங்கள் விரலில் இருக்கும் அந்த மோதிரத்தைக் கழற்றி என்னிடம் கொடுக்க வேண்டும். ஏனெனில் நேற்று நான் என் விரலில் போட்டிருந்த மோதிரம் அது."


தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 90 | 60 | 90 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 45 |
| தக்காளி | 50 | 50 | 55 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 50 | 70 |
| கரட் | 60 | 80 | 70 |
| பூசணி | 40 | 30 | 30 |
| புடோல் | 10 | 40 | 35 |
| வாழைக்காய் | 30 | 30 | 45 |
| சின்ன வெங்காயம் | 40-50 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 50 | 80 | 90 |
| பாகற்காய் | 160 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கரணைக் கிழங்கு | 35 | 40 | 60 |
| பயிற்றங்காய் | 240 | 60 | 60 |
| லீக்ஸ் | 110 | 120 | 130 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 80 | 90 | 90 |
| முருங்கைக்காய் | 170 | 220 | 140 |
| கீரை - 1 பிடி | 15 | 15 | 20 |
| தேசிக்காய் | 260 | 220 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# முள்வலி...

## திருமாவளவன் எழுதும் தொடர் 01



அக்டோபர் மாதம் 8 ஆம் திகதி சிதம்பரம் தொகுதியில், இளைஞர்களுக்கு இலவச வேலைவாய்ப்பு முகாம், மாணவர்களுக்குக் கட்டணமில்லா நடமாடும் கணனிப் பயிற்சியகம் ஆகியவற்றின் தொடக்க விழா மேடையில் தம்பிகளின் வழக்கமான நெரிசலில் மூச்சுத்திணறிக் கொண்டிருந்தேன்.

கூட்டத்தின் இரைச்சலில் என் கைபேசி ஒலித்தது,சரியாகக் கேட்கவில்லை. அதைத் தொடர்ந்து அந்தத் தகவல் அவசரமாக என்னிடம் வந்து சேர்ந்தது. தமிழக முதல்வர் கலைஞர் பேசவிரும்புகிறார் என்று சொன்னார்கள். என்னவோ ஏதோ என்கிற பதற்றம் என்னைத் தொற்றிக்கொண்டது. அவரோடு பலமுறை நான் தொலைபேசியில் பேசியிருக்கிறேன் என்ற போதிலும் அப்போதிருந்த சூழ்நிலையில் என் படபடப்புக்கு ஒரு காரணம் இருந்தது.

ஆகஸ்ட் 17 அன்று எனது பிறந்த நாளில் வாழ்த்துப் பெற கலைஞரைச் சந்தித்திருந்தேன். அந்த நாளை எழும் தமிழீழம் என்ற தலைப்பில் ஒரு மாநாடாக ஒழுங்கமைத்திருந்தோம். அந்த மாநாட்டையொட்டி தமிழகமெங்கும் பிரபாகரன் படம் பொறித்த விளம்பரப் பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன. காவல்துறையினர் அவற்றையெல்லாம் அப்புறப்படுத்தினர்.

அழகிரி அவர்களுக்கும் இடையில் ஒரே ஒரு முரண்பாடு தான் உண்டு.

அது என்னவென்றால், நான் தீவிரமாய் விடுதலைப் புலிகளை ஆதரிப்பேன்.அவர் தீவிரமாய் எதிர்ப்பார். அவ்வளவுதான் என்று நான் பேசியிருந்தேன்.உள்துறை அமைச்சரை மேடையில் வைத்துக் கொண்டே நீங்கள் இப்படிப் பேசலமா? உங்கள் உறவு பாதிக்காதா? என்று அப்போதே ஊடகவியலாளர்கள் கேட்டனர். அது தொடர்பாக, ப.சிதம்பரமோ கே.எஸ்.அழகிரியோ மனக்குறையாக ஒன்றும் சொல்லவில்லை. எனினும் முதல்வரிடத்தில் அது குறித்துப் பேசியிருப்பாரோ, அதைப் பற்றித்தான் முதல்வர் ஏதோ பேசப் போகிறாரோ என்றெல்லாம் அந்த ஒரு நொடிப் பொழுதில் எண்ண அலைகள் பரவின.

ஆனால், அவர் அதைப் பற்றியும் கேட்கவில்லை. வரும் 10 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கை செல்வது சம்பந்தமாக ப.சிதம்பரம் என்னிடம் பேசினார். அதன்படி, தி.மு.கவில் இருந்தும் காங்கிரஸில் இருந்தும் தமிழகத்தில் இருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொல்கிறர்கள். தி.மு.கவில் டி.ஆர்.பாலு,கனிமொழி,டி.கே.எஸ். இளங்கோவன், திருச்சி சிவா, ஹெலன் டேவிட்சன் ஆகியோர் அந்தக் குழுவில் இடம் பெறுகிறார்கள்.தி.மு.கசார்பில் இடம்பெறும் ஆறாவது உறுப்பினர் யார் தெரியுமா? என்று திடீரென ஒரு புதிரைப் போட்டார்.

அவர் என்னைச் சொல்கிறர் என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. என்னை இந்தக்குழுவில் இணைப்பதில் அவருக்குப் பல சங்கடங்கள் இருக்கும் என்று எனக்குத் தெரியும். அதனால் தான் நான் என்னைச்

உணர்வு என்னுள் எழுந்தது. அன்றைக்கு எனக்கு அந்த மண்ணில் அளிக்கப்பட்ட வரவேற்பு, என் சொந்தங்களின் பாசம் கலந்த உணர்வுபூர்வமானதாக இருந்தது.அந்தப் பாசத்தோடு அங்கே சென்று திரும்பியதற்கும், இப்போது கூட்டணிக் குழுவாக அரசு மரியாதையுடன் செல்லும்போது நிலவுகிற சூழ்நிலைக்கும் தான் எத்தனை வேறுபாடுகள்.

இப்போது நான் அங்கு சென்றபோது அளிக்கப்பட்ட வரவேற்பில் முழுக்கமுழுக்க வெறுமையும் போலித்தனமுமே குடிகொண்டிருந்ததை என்னால் உணரமுடிந்தது. என் தமிழ்ச் சொந்தங்களைக் பார்க்கப் போகிறேன்... எண்ணற்ற இன்னல்களில் சிக்கி, இறுதி நம்பிக்கைகளை இழந்து, எந்த திசையிலிருந்தாவது கடைசியாகவேனும் ஓர் உதவிக்கரம் நீளாதா என்று முள்வேலிகளுக்குப் பின்னால் வலியோடு காத்திருக்கும் அந்த மக்களின் கண்ணீரைத் துடைக்க முடிகிறதோ இல்லையோ... அவர்களுக்கு சில ஆறுதல் மொழிச் சொல்லவேணும் இப்போது வாய்ப்பு அமைந்ததே... என்ற எண்ணம் மட்டுமே என்னுள் பொங்கியது.

குழுவாகத்தான் கிளம்பினோம் .ஆனால், அந்த மேடையின் நெரிசலிலும் தனித்து விடப்பட்டது போல் உணர்ந்தேன்.

### அக்டோபர் 9

கோபாலபுரத்தில் முதல்வரை இலங்கைப் பயணக்குழு நேரில் சந்தித்தது. அப்போது குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, முதல்வர் முன்னிலையில் சில விவரங்களைச் சொல்லிக் கொண்டே வந்தார். அங்கே போய் யார் யாரைப் பார்க்கவேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் சொல்லிக் கொண்டே

இதோ இப்போது அங்கே செல்வதற்கு ஓர் வாய்ப்பு . ஆனால் நாங்கள் கிளம்புகிறபோதே பாழாய்ப்போன அரசியல் விமர்சனங்களும் கிளம்பிவிட்டது. எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் அக் குழுவில் யாரும் இடம்பெறவில்லை.



கடுமையான விமர்சனங்களுக்கு கேட்கவா வேண்டும்? உண்மை நிலைமைகள் வெளிச்சத்துக்கு வராது. சர்வதேச நெருக்கடிகளிலிருந்து ராஜபக்ஷவைக் காப்பாற்றுவதற்காக இந்திய அரசு நடத்தும் நாடகம் இது.

அதற்குத் தமிழக அரசு துணை நிற்கிறது என்றும் எதிர்க் கட்சியினர் தாறுமாறாக அறிக்கைகளை வெளியிட்டனர். தேர்தலின்போது தி.மு.க காங்கிரஸ் கூட்டணியில் விடுதலைச்

## நல்ல பிள்ளையாகப் போய்வாருங்கள் கலைஞர் எமக்குக் கூறிய ஆலோசனை!



சுவர் விளம்பரங்களையும் கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை. அன்று நான் வந்திருப்பது வாழ்த்துப் பெறுவதற்கு என்று தெரிந்திருந்தாலும், முதல்வர் என்னைக் கடிந்து கொள்ளத்தயங்கவில்லை.அவர் என் மீதும் விடுதலைச் சிறுத்தைகளின் மீதும் அக்கறை கொண்டவர்தான். அந்த உரிமையோடு கண்டிக்கிறார் எனப் புரிந்தால், நான் அதை நெருடலின்றி ஏற்றுக்கொண்டேன். விமர்சித்த கையோடு எனக்குப் புத்தகம் ஒன்றைப் பரிசளித்து வாழ்த்தவும் செய்தார் முதல்வர்.

அதன்பிறகு ஒரு சில வாரங்கள் இடைவெளி விழுந்திருந்தது.தி.மு.கவுக்கும் விடுதலைச் சிறுத்தைகளுக்குமான உறவு குறித்து ஊடக வட்டாரங்களில் வெவ்வேறு விதமான செய்திகளும் வெளியாகிக் கொண்டிருந்தன. இந்த நேரத்தில் தான் முதல்வர் பேச விரும்புகிறார் என்கிற தகவல் வந்தது. அதனால் தான் அந்த மெல்லிய தயக்கம்.

தலைமைச் செயலகத்தில் இருந்த முதல்வரோடு தொடர்பு கொண்டபோது மிகவும் இயல்பாகவே பேசினார். இந்திய அரசின் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் காலையில் தம்மிடம் பேசியதாகச் சொன்னார்.மறுபடி எனக்குள் தயக்கம். அக்டோபர் 6 அன்று கடலூரில் நடந்த கடனுதவி வழங்கும் விழா ஒன்றில் அமைச்சர் ப.சிதம்பரம் முன்னிலையில் பேசியது என் நினைவுக்கு வந்தது. கடலூர் நிகழ்ச்சியில் எனக்கும் கே.எஸ்.

சொல்கிறார் என்று அப்போது ஊகிக்கவில்லை. ஆனால், அவர் என் பெயரைத்தான் சொன்னர். இலங்கை செல்லும்.தி.மு.க. குழுவின் ஆறாவது உறுப்பினர் திருமாவளவன் என்று சொல்லிச் சிரித்தார்.

கிடைத்திருப்பது அரிய வாய்ப்பு என்று பளிச்செனப் புரிந்தது.மனம் நெகிழ்ந்தது. பற்றி எரிந்துகொண்டிருந்த அடிவயிற்றில் பால் வார்த்தது போல் இருந்தது.உன்னை வேறு ஒரு கட்சியின் உறுப்பினராய்ப் பிரித்துப் பார்க்காமல் எங்களில் ஒருவனாகவே கருதுகிறோம் என்று முதல்வர் கூறியதில் இருந்த நெருக்கமும் தோழமையும் புரிந்தது. ஆனால் இன்னொரு செய்தியை அழுத்தமாகக் கூறினார்.

நல்ல பிள்ளையாகப் போய்விட்டுத் திரும்ப வேண்டும்.

வாய்ப்பு பெரியது அவர் சொன்ன தன் பொருளையும் நான் ஊகித்துக் கொண்டேன். அங்கே நடக்கும் சந்திப்புக்களின் போது யாருக்கும் எந்தவொரு சங்கடமும் நேராத வகையில் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும்... அங்கே என்ன நடந்தாலும் உணர்ச்சிகள் கட்டுமீறிப் போகவிடக் கூடாது அதுதானே...?

2004 ஆம் வருடம் இதே இலங்கை மண்ணுக்கு நெஞ்சுகொள்ளாத பெருமையோடு சென்ற நினைவுகள் என்னை உடனே ஆக்கிரமித்தன. அங்கே ஒரு இணையற்ற தலைவனுடன் அமர்ந்து, இலங்கைத் தமிழினத்தின் எதிர்காலம் குறித்து நடத்திய கனமான விவாதங்கள் வந்து அலையாக மோதின.

அன்றைக்கு என் சொந்தங்களைக் காண உயிரைப் பணயம் வைத்துச் செய்த பயணம் அது. அப்போது என் சொந்த தாய்மண்ணில் கால்வைத்தது போன்ற

வந்தபோது... காங்கிரஸ் உறுப்பினர் கே.எஸ்.அழகிரி இடைமறித்து, இவையெல்லாம் திருமாவளவனுக்காகச் சொல்லப்படுவதுதானே என்றார். எல்லோரும் என்னையே பார்த்தார்கள். நானும் அவர்களோடு அந்த கணத்தின் நகைச்சுவைபோல அதை பாவித்துச் சிரித்தாலும், நெஞ்சம் கனத்து விம்மிக் கொண்டிருந்தது.

நடந்து முடிந்தவை குறித்து நெஞ்சு விம்மிக்கொண்டே விமானத்தில் பறந்தது. இந்த உலகில் ஒருவருக்குக் கூடவா நெஞ்சிலே சொட்டு ஈரமில்லை? கடைசிப் பொழுதுகளிலாவது மனிதநேய அடிப்படையில் போரை யாரேனும் தந்திருக்கவே முடியாதா உலகப் பந்தின் ஒரே ஒரு நாட்டுக்குக் கூடவா எம் தமிழ்ச் சொந்தங்களைக் காப்பாற்ற மனமில்லாமல் போய்விட்டது?

எல்லாமே தலைகீழாய் மாறிப்போனதே... வன்னி நிலம் வதை நிலமானதே... மனித நேயம் மரித்து வீழந்ததே.

உலகில் உருவான தமிழர்களின் ஒரே தேசமான தமிழீழம் பகைக் கும்பலின் கைகளுக்குப் பறிபோன நிலையில் .... வல்லாதிக்க வெறிபிடித்த நாடுகளின் கூட்டு அரசுப் பயங்கரவாதத்தால் வீரஞ்செறிந்த ஒரு விடுதலை இயக்கம் சில்லுச் சில்லாய் நொறுங்கிச் சிதறிய நிலையில் அடுக்கடுக்கான எத்தனை போராட்டங்கள், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், மாநாடுகள், சாகும்வரை உண்ணா நிலை, அறப்போர்.

அதன் விளைவாக தமிழகத்தில் அரசியல் பெருநெருப்பு மூண்டபோதும் எம் சகோதரர்களுக்கு தோள் கொடுக்க ஒரு நாதியில்லையே என்கிற ஆற்றாமையில் அல்லவா புழுங்கித் தவித்தோம். இயலாமையால் பதைக்கும் மனதோடு வேதனையில் வீழ்ந்து கிடந்த நிலையில் எல்லாமே அல்லவா முடிந்து போனது.

சிறுத்தைகளும் இடம்பெற்றதனால் அ.தி.மு.க. கூட்டணியினருக்கு விடுதலைச் சிறுத்தைகளின் மீது கடுமையான ஆத்திரம் ஈழப் பயணக் குழுவில் விடுதலைச் சிறுத்தைகள் இடம் பெற்றதைச் சாக்காகக் கொண்டு மனம்போன போக்கில் எங்களையும் விமர்சிக்கத் தொடங்கினர்.

இதற்கு நடுவே பாதுகாப்புக் காரணங்கள் கருதி இப்பயணத்தைத் தவிர்ப்பது நல்லது என்கிற கருத்தை விடுதலைச் சிறுத்தை தோழர்கள் முன்வைத்தனர். ராஜீவ் காந்தியையே இராணுவ அணி வகுப்பின் போது துப்பாக்கிக் கட்டையால் அடித்துக் கொல்ல முயற்சித்தவர்கள் அங்குள்ள அரசின் அனுமதியோடு சென்றாலும் கூட அவர்கள் எந்த நிலைக்கும் சென்று உயிருக்கு உலை வைக்கும் வாய்ப்பு உண்டு.

சுட்டுத் தள்ளிய பிறகு ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி சமாளிக்கவும் வாய்ப்புண்டு. தமிழ் அமைப்புகளின் மீது பழிபோட்டுத் தப்பிக்கவும் வாய்ப்புண்டு.

குறிப்பாக இந்திய அரசையும் சிங்கள அரசையும் கடுமையாக விமர்சிக்கும் விடுதலைச் சிறுத்தைகள் மீது இந்திய ஆட்சியாளர்களுக்கும் ஆத்திரம் உள்ளது. எனவே இந்தப் பயணத்தை தவிர்ப் பதே நல்லது என்றனர் சிறுத்தைகள்.

எதிர்க்கட்சிகளின் ஆத்திரம் விடுதலைச் சிறுத்தைகளின் ஐயம் இவற்றையெல்லாம் தாண்டி தமிழினத்தை அழித்தொழிக்கும் இனப்பகைவர்களை நேரில் சந்திக்கும் போது உணர்ச்சிகளை எப்படி கட்டுப்படுத்துவது என்பதே என் முக்கிய சிந்தனையாக இருந்தது.என்னைச் சோதிப்பதற்கென்றே இலங்கை மண்ணில் அடுத்தடுத்து அரங்கேறின காட்சிகள்... சம்பவங் கள்...இரத்தம் கசியும்....

(வளரும்)

# நல்லூர் பிரதேச சபை

## சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழுங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் -2010

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 2010ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| **கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :** | **13.11.2009** | **நண்பகல் 12 மணி வரை** |
| **கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :** | **16.11.2009** | **காலை 10 மணிவரை** |
| **கேள்வி திறக்கும் திகதி:** | **16.11.2009** | **பிற்பகல் 2.00மணி** |

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு,மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை செயலாளர் ,நல்லூர் , பிரதேச சபை 14/5, கருவப்புலம் வீதி,கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்ட தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு,பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,உள்ளூராட்சித் திணைக்களம் ,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக்கொண்டு வருதல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
4. கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் ,மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
5. கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை,கொக்குவில் சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின்,ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00 இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது .தெரிவு செய்யப்படும் சந்தைக்குரிய கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியையும் இறைச்சிக்கடைகளுக்குரிய கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 2/3 பகுதியையும் 24.11.2009ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும் .மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## 2010ஆம் ஆண்டு சந்தைகள்,இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள், (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த )ரூபா. |
|---|---|---|---|---|

### நல்லூர் உப அலுவலகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 6424770.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச் சிக்கடை | 500.00 | 5,000.00 | 158813.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழி இறைச் சிக்கடை இல: 1 | 500.00 | 5,000.00 | 75000.00 |
| 4 | திருநெல்வேலிச்சந்தை கோழி இறைச் சிக்கடை இல: 2 | 500.00 | 5,000.00 | 75000.00 |

### கொக்குவில் உப அலுவலகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்கரவண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 315678.00 |
| 2 | கொக்குவில் சந்தை மாட்டிறைச் சிக் கடை | 500.00 | 5,000.00 | 214429.00 |
| 3 | கொக்குவில் சந்தை ஆட்டிறைச் சிக் கடை | 500.00 | 5,000.00 | 185548.00 |
| 4 | கொக்குவில் உப அலுவலக மாட்டி றைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 331485.00 |
| 5 | கொக்குவில் உப அலுவலக ஆட்டி றைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 35805.00 |
| 6 | கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறிச் சந்தையும் மாட்டிறைச்சிக் கடையும் | 500.00 | 5,000.00 | 83276.00 |
| 7 | கொக்குவில் உப அலுவலக பலாலி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 123585.00 |

**குறிப்பு :** திருநெல்வேலிச் சந்தையில் கோழி இறைச்சிக்கடைகளுக்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையினால் சந்தைப்பகுதியிலிருந்து 500m தூரத்திற்குள் கோழி இறைச்சியாகவோ உயிருள்ள கோழியோ விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டது.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
28.10.2009

மே.சாந்தசீலன்,
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(சி/3629)

## தாச்சிச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உடுவில் ஞானப் பிரகாசம் விளையாட்டுக்கழகம் எதிர் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4.30 மணிக்கு சுதுமலை ஐங்கரன் விளையாட்டுக் கழகமும் எதிர் மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

இப்போட்டியில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இணுவில் அறிஞர் விளையாட்டுக்கழகம் எதிர் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழகமும் பிற்பகல் 4.30 மணிக்கு நவாலி சென்றோக் விளையாட்டுக்கழகமும் எதிர் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழகம் ஆகியன மோதவுள்ளன.

இப்போட்டிகள் யாவும் சுதுமலை யுவசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகத்தினர் தெரிவிக்கின்றனர். (ஓ-4)

## மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு மானியம்

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் சாவகச்சேரி பிரதேச செயலகம் ஊடாக கச்சாய், கெற்பலி, நாவற்காடு, வரணி, இயற்றாலை ஆகிய இடங்களிலுள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு ரூ. 12 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது.

மேற்படி சங்கங்கள் இந்நிதியைக் கொண்டு சங்க உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக சுழற்சி முறை கடன் திட்டத்தை மேற்கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடகோவை ஸ்ரீ சாந்தி துர்க்கா தேவஸ்தானத்தில் அடிக்கல் நாட்டுவிழா நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளதாக தேவஸ்தான தர்மபரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர். (ஓ-4)

## மயிர்க்கொட்டிகள் அதிகரிப்பால் மக்கள் வேதனை

(ஊர்காவற்றுறை)

தீவகத்தில் மயிர்க் கொட்டிகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சுருவில் வீதியில் ஜோர்ஜ் வர்த்தக நிலையம் முன்பாகவுள்ள மரங்களில் மயிர்க் கொட்டிகள் உள்ளதால் அந்த மரங்கள் வெட்டப்பட்டு எரிக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை 40 பேருக்கு மேல் மயிர்க் கொட்டி பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-72)

## உவர்நீர் தடுப்பணையை புனரமைக்க கோரிக்கை


(பொன்னாலை)

பொன்னாலையிலிருந்து ஆரம்பித்து அராலித் துறைமுகம் வரை நீண்டு செல்லும் உவர்நீர்த் தடுப்பணையைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.


சுமார் 15 கிலோ மீற்றர் நீளம் வரையான மேற்படி உவர்நீர்த் தடுப்பணை கடந்த 40 வருடங்களுக்கு மேலாக புணரமைக்கப் படாதிருந்து வருகின்றது.

இதனால் மாரிகாலங்களில் அருகிலுள்ள வயல்நிலங்களில் கடல் நீர் கலக்கும் அபாயம் உள்ளது. இதனை கருத்திற் கொண்டு குறித்த உவர்நீர் தடுப்பணையை புனரமைக்க நட வடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வடக்கின் வசந்தம் போன்ற திட்டங்கள் மூலம் புனரமைக்க நடவடிக்கை எடுத்தால் தாம் பெரிதும் நன்மை அடைவர் என்றும் விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர். (ஓ-49)





குருதிக் கொடையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா உரையாற்றுவதையும், குருதிக்கொடையாளி ஒருவரை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலக செய்தியாளர்)

## இலகு வேலைத்திட்டம் மூலம் வீதி துப்புரவுப் பணிகள்

(பொன்னாலை)

உலக உணவுத் திட்டத்தின் கீழான இலகு வேலைத்திட்டம் மூலம் வலி. மேற்கிலுள்ள பல வீதிகள் துப்புரவு செய்யப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

வீதியின் இருமருங்கும் முட்புதர்களும், பற்றைகளும் அடர்ந்திருந்த பல வீதிகள் இலகு வேலைத் திட்டப் பயனாளிகளால் துப்புரவு செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் விளங்குவதை அவதானிக்க முடிகின்றது.

இவை தவிர பாடசாலை வளாகங்கள், பொது இடங்கள், குள வாய்க்கால்கள், விளையாட்டு மைதானங்கள் என்பனவும் இலகு வேலைத்திட்டம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (ஓ-49)

## இறந்த விசுவாசிகள் நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

இறந்த ஆன்மாக்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து அவர்களின் ஆன்ம சாந்திக்காக இறைவனிடம் மன்றாடும் தினமான நவம்பர் மாதம் 2 ஆம் திகதி இறந்த விசுவாசிகள் நினைவு தினம் சகல கிறிஸ்தவர்களாலும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை மாலை சகல சேமக்காலைகளிலும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (ஓ)

## பரிசளிப்பு விழா

(அல்வாய்)

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ச. ஸ்ரீராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி ச. புஸ்பலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் மாணவர்களுக்குரிய பரிசில்களை திருமதி புஸ்பகுமாரி புஸ்பலிங்கம் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஓ-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரி தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி அதிபர் பொன். அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை பாடசாலை வேலைப் பகுதி பொறியியலாளர் குணரத்தினம் சிவபாலன் கலந்து சிறப்பிப்பதுடன் மாணவர்களுக்கான பரிசில்களை யாழ். கோட்டக்கல்வி அதிகாரி திருமதி வசந்தமாலா சிவபாலன் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஓ-4)


தென்மராட்சி வரலாற்றில் முதன் முதலாக
மக்களின் சேவையினை
முழுதாகக் கொண்ட முற்றிலும் குளிரூட்டப்பட்ட நெற்கபே

SATHANA Cyber Net Cafe

எமது சேவைகள்

- இன்ரநெற் புறோசிங் (Internet Browsing) 1 Hour-60/=
- இன்ரநெற் Call அனைத்து நாட்டிற்கும் 1 Min-6/=
- நேரடியாக முகம் பார்த்துக் கதைத்தல் 1 Min-6/=
- ஈமெயில் (E-mail), பக்ஸ் (Fax) மற்றும் இதர சேவைகள்
- அனைத்து விதமான டிசைனிங் (Designing), பிறிண்டிங் (Printing)
- Video Mixing மற்றும் கணனி சம்பந்தமான திருத்த வேலைகள் (Hard Ware Repairing)
- அமெரிக்கன் GREEN Card லொத்தர் விசா நடைமுறைகள்

அனைத்துக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

சாதனா சைபர் நெற்கபே

இல. KUF 04, நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி.

T.P:-0777696771

(C-3620)







ஓம் சக்தி மயம்

லகு ஸ்ரீசக்ர பூஜா
(கைலாசநாத பத்ததி)

நூல் வெளியீட்டு விழா

நூல் ஆக்கியோன்
நயினை
'பிரதிஷ்டா பூஷணம்'
சிவஸ்ரீ.ஐ.கைலாசநாதக் குருக்கள்

இடம்:- ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினாதீவு
காலம்:- விரோதி வருஷம் ஐப்பசிமாதம் 16ஆம் நாள்
(பூரணை தினம்) 02.11.2009 திங்கட்கிழமை
நேரம்:- காலை 9.30 மணி

நிகழ்ச்சி நிரல்

மங்கலவிளக்கேற்றல், வேதஸ்தோத்திர, திருமுறை பாராயணங்கள்,
வரவேற்புரை.

குருதேவாயசமர்ப்பணவுரை: கிரியா கலாப முக்தாமணி
சிவஸ்ரீ.ச.மகேஸ்வரக்குருக்கள்
(ஆதீனகுரு, ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினை)

வாழ்த்துரை: ஆகமப் பிரவீணா சிவஸ்ரீ.கைலை.வாமதேவக் குருக்கள்
(ஆதீனகுரு, ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினை)

அருளுரை: நல்லை ஞானசம்பந்த ஆதீன முதல்வர், குருமஹா சந்நிதானம்
சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்

தலைமையுரை: "திருமுருக மாமணி" திரு.ஆ.தியாகராஜா
(அறங்காவலர் சபைத் தலைவர், ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர், வேலணை)

சிறப்புரைகள்: சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள்
(தலைவர், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம்)
கலாநிதி மா.வேதநாதன்
(தலைவர், இந்துநாகரிகத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.ஆறுதிருமுருகன்
(தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை, அதிபர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

கருத்துரை: பேராசிரியர் வி.சிவசாமி
(முன்னாள் தலைவர், சமஸ்கிருதத்துறை யாழ்.பல்கலைக்கழகம்)

பாராட்டுரை: திரு.கு.சரவணபவானந்தன்
(செயலாளர், நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம் நயினை கோட்டக் கல்விப்பணிப்பாளர், வேலணை)

நூல் அறிமுகவுரை: பிரம்மஸ்ரீ.ப.சிவானந்தசர்மா
(கோப்பாய்சிவம்) அதிபர், ஸ்ரீ வித்யா அச்சகம், இணுவில்)

நூல் வெளியீட்டுரை: மேற்படி நூல் பதிப்பாசிரியர்
பிரம்மஸ்ரீ. ம.பாலகைலாசநாதசர்மா
(சமஸ்கிருத விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்)

நூல் வெளியீடு

அதிவந்தனீய சர்வதேச இந்து மத குருபீடாதிபதி, கிரியாகலாப முக்தாமணி
சிவஸ்ரீ.ச.மகேஸ்வரக்குருக்கள்
(ஆதீனகுரு, ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினை,
பிரதமகுரு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், சுதுமலை)

நூல் வெளியீட்டுக்கான அனுசரணையாளர்: தேசகீர்த்தி தொழிலதிபர்
திரு.து.சேரன்குமார் J.P. (வவுனியா)

முதற்பிரதி :சிவாச்சார்ய சூடாமணி
சிவஸ்ரீ.சுவாமிநாத பாலசுந்தரக் குருக்கள்
(ஆதீனகுரு, ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினை)

சிறப்புப் பிரதி :கிரியா தத்துவநிதி
சிவஸ்ரீ.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்
(பிரதம குரு, பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்)

கௌரவப் பிரதி :சிவாகமாநுசாரிதசார்த்தூலர்
சிவஸ்ரீ.சிவநித்தியானந்தக் குருக்கள்
(பிரதம குரு, இலுப்பத்தாழ் முருகமூர்த்தி, தேவஸ்தானம், சங்கானை)

தொடர்ந்து அனைத்து சிவாச்சார்யப் பெருமக்களுக்கும் நூல்
வழங்கப்படும்

நன்றியுரை :திரு.சி.தனபாலசிங்கம்
(அறங்காவலர் சபை உறுப்பினர், ஸ்ரீநாகபுஷணி அம்பாள், தேவஸ்தானம், நயினை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் நயினாதீவு

(இ)

# பேராண்மை



திரை விமர்சனம்

நட்சத்திரங்கள்:ஜெயம்ரவி, பொன்வண்ணன், வடிவேலு, ஊர்வசி, ரோலண்ட் கிக்கிங்கர் மற்றும் பலர்
இயக்கம்:எஸ்.பி.ஜனநாதன்



கடல்புறத்து மக்கள், நகரத்தின் எச்சங்களாய் வீசியெறியப் பட்ட விளிம்பு நிலை மனிதர்கள்... இப்படி சமூகத்தின் பல வகை மனிதர்களைப் படிப்பதில் தனக்குள்ள தீவிர ஆர்வத்தை மீண்டும் வெளிப்படுத்தியிருக்கிறார் இயக்குநர் எஸ்பி ஜனநாதன், பேராண்மை மூலம். இந்த முறை காடும் காடு சார்ந்த மனிதர்களையும் பற்றி முடிந்தவரை அழுத்தமான ஒரு பார்வையைப் பதிய வைக்க முயன்றுள்ளார்.

இந்த முயற்சியில் அவர் ஆங்காங்கே இடறி இருப்பது உண்மையென்றாலும் இந்த மட்டிலாவது யோசிக்க தமிழ் திரையுலகில் ஒருவர் இருக்கிறார் என்பதே ஆறுதல் தான்.

துருவன் (ஜெயம்ரவி) ஒரு பழங்குடி இளைஞர். கஷ்டப்பட்டு படித்து வனஇலாகா அலுவலராகதான் பிறந்த காட்டிலேயே பணியாற்றுகிறார். அவருக்கு மேலதிகாரி சாதித் திமிர் பிடித்த பொன்வண்ணன். நேரம் கிடைக்கும் போதெல்லாம் துருவனின் சாதியைப் பழிப்பது இவரது பிரதான பொழுது போக்கு. இந்தக் காட்டுக்கு அருகில் தான் இந்திய அரசின் செயற்கைக்கோள் ஏவுதளம் உள்ளது.

ஒருநாள் சென்னையிலிருந்து என்.சி.சி பயிற்சிக்காக மாணவிகள் பட்டாளம் ஊர்வசி தலைமையில் அந்தக் காட்டுக்கு வருகிறது. அவர்களுக்கு ஜெயம் ரவிதான் பயிற்சியாளராக இருக்கிறார். ஆனால் மாணவிகள் அவரது இனத்தைப் பற்றித் தெரிந்து கொண்டு மட்டம் தட்டிப் பேசுகின்றனர். ஒரு கட்டத்தில் இந்த மாணவிகளில் அடங்காத குதிரைகளான 5 பேரை மட்டும் ஜெயம் ரவியுடன் ஆள் நடமாட்ட மில்லாத காட்டுக்கு பயிற்சிக்கு அனுப்புகிறார்கள். அந்தக் காட்டுக்குள் நுழையும் போதுதான், பசுமைப் புரட்சிக் காக இந்திய அரசு ஏவ வைத்திருக்கும் செயற்கைக் கோளை சில அந்நிய சக்திகள் கடத்த முற்படுவதை அறிகிறார்கள்.

உடனே ஜெயம்ரவி தலைமையில் அந்த சதித் திட்டத்தை முறியடிக்கும் முயற்சியில் இறங்கு கிறார்கள். 5 பெண்களும் முயற்சியில் ஜெயித்திருக்கிறார்களா என்பது மீதிப்படம்.

வித்தியாசமான கதைக் களம், மனிதர்களை கண்முன் நிறுத்தியிருக்கிறார் இயக்குநர் ஜனநாதன்.

இந்தப் படம் ஒரு விதத்தில் ஜெயம்ரவியை முழுமையான நாயகனாக முன்னிலைப்படுத்துகிறது என்றால் மிகையல்ல. ஒவ்வொரு காட்சிக்கும் அபாரமான உழைப்பைக் கொட்டியிருக்கிறார். அதிலும் இரண்டாவது பாதியில் கலக்கியிருக்கிறார் மனிதர்.

ரவியுடன் வரும் அந்த அடங்காப்பிடாரி பெண்கள் (மகா, தன்சிகா, வசுந்தரா, சரண்யா மற்றும் லியஸ்ரீ) சமயத்தில் அட்டகாசம் பண்ணுகிறார்கள். ஆனால் பெரும்பாலான நேரங்களில் கடுப்பேற்றுகிறார்கள்.

பொன் வண்ணன் பாத்திரத்தை வில்லன் அல்லது வக்கிரபுத்திக்காரன் என்ற கட்டுப்பாட்டுக்குள் வைக்காமல் இதெல்லாம் கலந்து இயல்பான மனிதராகவே காட்டியிருக்கிறார் ஜனநாதன். ஊர்வசி கேரக்டர் பெரிதாக இம்ப்ரஸ் பண்ணவில்லை. வடிவேலுவை முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்பது தெரிகிறது. ஆனாலும் சில காட்சிகளில் சிரிப்பை வரவழைக்கிறார். வில்லனாக வரும் ஹொலிவூட் நடிகர் ரோலண்ட் கிக்கிங்கருக்கு பெரிய வேலையில்லை.

வித்யா சாகரின் பின்னணி இசை ஓ.கே. படத்தில் ஜனநாதனின் வலது கரமாகத் திகழ்பவர் ஒளிப்பதிவாளர் சதீஷ்குமார். பேராண்மையை நல்ல அட்வென்சர் படமாக மாற்றியிருப்பதில் அவரது உழைப்பு இயக்குநருக்கு இணையானது. ஏ,பி,சி என்று பேதம்பார்க்காமல் எல்லோரும் ஒருமுறை பார்க்கவேண்டிய படம்தான் !

# பொங்கலுக்கு அசல்



பொங்கலுக்கு எப்படியும் அசல் படத்தைக் கொண்டு வருவதென்பதில் படத்தின் இயக்குநர், ஹீரோ, தயாரிப் பாளர் என அனைத்துத் தரப்பும் உறுதியாக இருக்கிறது. சமீராரெட்டி, பாவனா என்று இரண்டு ஹீரோயின்கள் சம்பத்,சுரேஷ் என இரண்டு வில்லன்கள் என டபுள் ஸ்ட்ரோங்காக உருவாகி வருகிறது அசல். பாரிஸில் படப்பிடிப்பை முடித்துவிட்டு சில நாட்களுக்கு முன்புதான் தமிழகம் திரும்பியிருக்கிறார்கள். சண்டைக்காட்சிகள், பாடல்காட்சிகள் என இன்னும் 20 சதவீதப் படம் பாக்கியிருக்கிறது.

இதுவரை எடுத்ததை போட்டுப் பார்த்ததில் அனைவருக்கும் திருப்தி. படப்பிடிப்பை ஒரு மாதத்துக்குள் முடித்து டிசம்பரில் ஆடியோவை வெளியிடவேண்டும் என்பது திட்டம்.

இந்தப் பொங்கல் அஜித் ரசிகர்களுக்கு தல பொங்கல்.

# பிரியங்கா, தீபிகாவுக்கு வலைவிரிக்கிறார் சிம்பு



நடிகர் சிம்பு தனக்கு ஜோடியாக நடிக்க பொலிவுட் முன்னணி நடிகைகளான பிரியங்கா சோப்ரா, தீபிகா படுகோனே ஆகியோருக்கு வலை விரித்திருக்கிறார். சிம்பு தனது 25 ஆவது படத்தை தானே இயக்க திட்டமிட்டிருக்கிறாராம். வித்தியாசமான கதைக் களத்துடன் உருவாகும் இப்படத்தில் தனக்கு ஜோடியாக நடிக்க பொலிவுட் நடிகையை ஒப்பந்தம் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்.

இதற்காக இந்தியின் முன்னணி நடிகைகளான பிரியங்காசோப்ரா, தீபிகா படுகோனே ஆகியோரிடம் கால்ஷீட் கேட்டிருக்கிறார். இருவரும் தங்களது முடிவை இன்னும் சொல்லவில்லை. என்றாலும் இரண்டில் ஒன்று நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் காத்திருக்கிறாராம் சிம்பு.

# தேவயானி வழியில் சானரகான்



முன்பு நடிகை தேவயானி முன்னேறியது போலவே, இப்போது இளம் நடிகை சானாகானும் முன்னேறிக் கொண்டிருக்கிறார். நடிகை தேவயானி முதன்முதலாக தமிழ் சினிமாவில் அறிமுகமான படம் சிவசக்தி. ஒத்தப்பாட்டுக்கு குத்தாட்டம் போடும் நடிகையாக ஃபீஸ் உடை யணிந்து ஆட்டம் போட்ட தேவயா னிக்கு அடுத்தடுத்து நல்ல படவாய்ப்புக்கள் கிடைத்தன. இதனால்தமிழ் சினிமாவில் முன்னணி நாயகிகள் பட்டியலிலும் தேவயானிக்கு இடம் கிடைத்தது. இப்போது அவரைப் போலவே சானா கானும் முன்னேறி வருகிறார். இவரும் ஆரம்ப த்தில் ஈ படத்தில் இடம்பெற்ற ஒரு பாடலுக்கு ஆட்டம் போட்டு தமிழ் சினிமாவில் அறிமுக மானார். அதனைத் தொடர்ந்து சிம்புவுடன் சிலம்பாட்டம் படத்தில் ஹோம்லி நாயகியாக தோன்றினார். தற்போது பரத்துடன் தம்பிக்கு இந்த ஊரு படத்திலும் கிராமியப் பெண்ணாக நடித்து வரும் சானாகான், அடுத்து பாக்கியராஜின மகன் சாந்தனுவுடன் ஜோடிசேர்கிறார். இயக்குநர் எஸ்.பி. ஹோசிமின் இயக்கத்தில் உருவாக வுள்ள ஆயிரம் விளக்கு படத்தில் நாயகியாக சானாகான் ஒப்பந்தமாகியிருக்கிறார்.

# தஞ்சாவூர் தமிழை பதிவு செய்யும் களவாணி



திருநெல்வேலி தமிழ், கோவை தமிழ், மதுரை தமிழ்,சென்னை தமிழ் என்று ஏராளமான மொழிகள் தமிழ் சினிமாவில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. முதல் முறையாக தஞ்சாவூர் பகுதி கிராம மொழி களவாணி என்ற படத்தில் பதிவு செய்யப்படுகிறது. இதுபற்றி படத்தின் அறிமுக இயக்குநர் சற்குணம் அளித்துள்ளபேட்டியில், களவாணி ஒரு விறுவிறுப்பான சுவாரஸ்யமான யதார்த்த சினிமா. ஒரு ஊரில் இருந்து பக்கத்து ஊருக்கு படிக்க வரும் பெண்ணின் மனதை களவாடும் கதை.

தஞ்சாவூர் பகுதி கிராமங்களுக்கென்று ஒரு மொழி இருக்கிறது. இது வரைக்கும் எந்த தமிழ் சினிமாவிலும் பதிவு செய்யப்படவே இல்லை. அந்தக் குறை சினிமாவில் தீரும் என்று கூறியிருக்கிறார்.


# மாதவனின் அடுத்த அவதாரம் கதாசிரியர்



மொடலிங்கில் கலை வாழ்க்கையை தொடங்கிய மாதவன் பின்னர் நடிகராக அவதாரம் எடுத்து ஹிட் படங்களை கொடுத்தார். தமிழ் மற்றும் இந்திப் படங்களில் நடித்துவரும் மாதவன் எவனோ ஒருவன் படம் மூலம் தயாரிப்பாளர் அவதாரமும் எடுத்தார். இந்நிலையில் தற்போது அவர் கதாசிரியர் என்ற அடுத்த அவதாரத்திலும் அடியெடுத்து வைத்திருக்கிறார். முற்றிலும் வித்தியாசமான கதையை எழுதியிருக்கும் மாதவன், அந்தக் கதையை இயக்குநர் குமாரவேலனிடம் கொடுத்து படம் இயக்குமாறு கேட்டிருக்கிறார்.

கதையைப் படித்து பார்த்த குமார வேலன், இந்தப் படத்தில் மாதவனையே நடிக்கு மாறு கோரியுள் ளாராம். இதுபற்றி குமாரவேலன் அளித்த பேட்டியில், ரொம்ப சூப்பரான ஸ்டோரி. இந்தப் பட்த்தில் நடித்தால் மாதவனின் இன்னொரு முகம் ளெிப்படும் திரைக்கதை பற்றி விவாதிக்க மும்பை சென்று மாதவனை சந்திக்க இருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

# தெலுங்கு ரீமேக்குகளில் தனுஷ்



விட்டால் ஜெயம் ரவியின் இடத்தைப் பிடிப்பார் போலும் தனுஷ். ஜெயம் ரவி கூட ரீமேக் படங்களில்தான் தொடர்ந்து நடித்து ரீமேக் ரவி என்ற பெயரைப் பெற்றுக்கொண்டார்.

இப்போது தனுஷ் அதைப் பின்தொடர்ந்திருக்கிறார். இவர் நடித்து வெற்றிபெற்ற "யாரடி நீ மோகினி" படம் தெலுங்கில் "மாட்லக்கு அர்த்த வேர்லு" என்றதலைப்பில்வெளியானபடமே. இதைத் தொடர்ந்து இப்போது தனுஷ் நடித்துவரும் குட்டி படமும் தெலுங்கில் வெற்றிபெற்ற "ஆர்யா" படத்தின் ரீமேக்தானாம். இதில் ஸ்ரேயா இவருக்கு ஜோடியாக நடித்திருக்கிறார். இப்போது லேட்டஸ் டாக தனுஷ் தெலுங்கில் "ரெடி" என்று வெளியாகிசக்கைப் போடு போட்ட படத்தை வாங்கிஅதன் ரீமேக்கில் நடிக்க உள்ளாராம். இந்தப் படத்தையும் மித்ரன் ஜவஹர் தான் இயக்குகிறாராம். கதாநாயகியை வலைவீசித் தேடிக் கொண்டிருக்கிறார்களாம்.

# குறையும் நிலத்தடி நீர் மட்டம்

**சனத்தொகை அதிகரிப்பு மற்றும் பல காரணிகளால் நிலத்தடி நீர் அகழ்வு தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றது.**

உலக உயிர்களின் இருப்புக்குத் தேவையான நீர் பல வழிகளில் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது.

புவி மேற்பரப்பில் உள்ள நீர், நிலத்தடி நீர் மற்றும் மழை நீர் என்னும் வடிவங்களில் நன்னீர்

இந்த நீர் வட்டத்தில் முக்கிய பங்கு வகிப்பது மழை என்பது அனைவரும் அறிந்த விடயம் . இன்றைய கால நிலைப்பாதிப் பின் உணர் தகுதாக்கத்தின் விளைவு இந்த மழையிலேயே அதிகம் உணரப்படு

நீர் அகழ்வு தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றது. குறிப்பாக விவசாயத்துக்கான நிலத்தடி நீர் அகழ்வு மிகவும் அதிகரித்து காணப்படுகின்றது.

கால நிலைத் தாக்கங்களால் பருவ

நீர் தான். இவ்வாறு அதிகரித்த நீர்த் தேவைக்கு ஏற்ப இயற்கையின் செயல் முறையின் ஊடான பிரதியீடுகள் நிகழ்வது இல்லை.


மனித நடவடிக்கைகள் நிகழவிடுவதும் இல்லை. இக் காரணிகளால் நிலத்தடி நீர் மட்டம் வெகு விரைவாகக் குறைந்து செல்வதாகவும் இதற்கான மாற்றீட்டுத்திட்டங்களை மேற்கொள்ளும் படியும் பல விஞ்ஞானிகள் அறிவுறுத்தி வருகின்றனர்.

குறிப்பாக அண்மைக்காலத்தில் அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையம் மேற்கொண்ட ஆய்வு ஒன்றில் செய்மதி மூலம் பெற்றுக்கொண்ட தரவுகள் கணிப்புக்களின் அடிப்படையில் வட இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணப்பட்ட நிலத்தடி நீர் ஒரு அடியினால் குறைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது முற்று முழுதாக மனித செயற்பாட்டால் நடந்துள்ளதாகவும் ஏறத்தாழ 108 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் காணப்பட்ட நீர் காணாமல் போயுள்ளதாகவும் இது அமெரிக்காவில் உள்ள மனிதனால் உருவாக்கப்பட்ட ஏரியான மீட் ஏரியை 3 தடவைகள் நிரப்பப் போதுமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் நிலத்தடி நீர் மட்டக் குறைவு 2002க்கும் 2008க்கும் இடைப்பட்ட 6 வருட காலத்தில் நிகழ்ந்துள்ளதாகவும் பெரும்பாலான நீர் நிலத்தடியில் இருந்து பம்பிகள் மூலம் வெளியேற்றப்பட்டுள்ளதால் இந்நிலைமை தோன்றியுள்ளதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ் நிலத்தடி நீர் குறைவுச் செயற்பாடு இந்தியாவில் விவசாயத்தை நம்பியுள்ள 11.4 கோடி பேரின் வாழ்வாதாரத்தை உடனடியாகப் பாதிக்கும் எனவும் நாசா கருத்து



பா. நிரூபராஜ்

பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

பொதுவாக ஆசிய நாடுகளின் பின் தங்கிய பிரதேசங்கள் முக்கியமாக நிலத்தடி நீரைப்பெற்றுக் கொண்டு தனது நீர்த்தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றன.

நமது நாட்டின் பெரும்பாலான பகுதிகள் இன்னும் நிலத்தடி நீரை நம்பி உள்ளன.

ஆனால் அண்மைக்காலமாக இதிலும் பல சிக்கல்கள் உருவாகியுள்ளன என்பது சிறிது சிறிதாக உணரப்பட்டு வருகிறது.

அதாவது பல நாடுகளின் மக்கள் , நீரைப்பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் அனுபவிக்கின்றனர்.

இதிலும் இரண்டு விடயங்கள் உணரப்பட்டு வருகின்றன.

ஒன்று நிலத்தடி நீர் உவர்ப்பாகி வருகின்றமை

இதற்கு கடல் மட்ட அதிகரிப்பு காரணம் என கருதப்பட்டு வருகின்றது.

அத்துடன் நிலத்தடி நீர் ஓடைகளுடன் கடல் நீர் ஓட்டங்கள் கலப்பதால் இந்நிலை தோன்றுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோல் நிலத்தடி நீர் மட்டம் குறைவது வேறு பல காரணங்களாலும் மிகைபாவனை காரணமாகவும் நிகழ்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீர் ஒரு சக்கர செயல் முறையின் ஊடாக பூமியில் நிலைத் திருக்கும். உயிர் வாழ்வுக்குத் தேவையான அடிப்படைப்பதார்த்தம் திண்மம், திரவம் மற்றும் நீராவி என்னும் வடிவத்தில் நீர் பூமியில் காணப்பட்டாலும் திரவ நீரே நாளாந்தப் பயன்பாட்டில் உள்ளது.

**விஸ்வரூபம் எடுக்கவுள்ள நிலத்தடி நீர் பிரச்சினைக்கு மாற்று வழி தேடாவிடின் அல்லது குறையும் நீரைப் பிரதியிடப்போதுமான நடவடிக்கை எடுக்காது விடின் நிலத்தடி நீரைப் பெற்றுக்கொள்ளும் இடங்களில் உயிரின் இருப்பு மற்றும் நீடிப்பு கேள்வியாகவே தொடரும்.**


கிறது. என்ன தான் மழை பாதிப்புக்களை ஏற்படுத்தினாலும் அது தான் பூமி இருப்புக்கு அடிப்படை. அதாவது மழையாக பூமியை அடையும் திரவ நீர் நிலத்தின் மண்படைகள் ஊடாகவும் பாறைப் படுக்கைகளின் உள்ள நுண் துளைகள் ஊடாகவும் ஏனைய வழிகளிலும் பொசிவடைந்து வடிந்து நிலத்தடியை சேர்க்கின்றது.

இது நீர் வட்டத்தில் முக்கிய ஒரு செயல் முறையாகும். ஆனால் இன்று இச் செயல் முறையில் மனிதத் தாக்கங்களால் உருவான சில தடைகள் தோன்றியுள்ளதுடன், நீர் வட்டத்தில் இடையூறுகள் தோன்றியுள்ளன.

இதனால் நிலத்தடி நீர் சேகரிப்பு மந்த நிலையிலேயே நடை பெற்று வருகின்றது.

ஆனால் சனத்தொகை அதிகரிப்பு மற்றும் பல காரணிகளால் நிலத்தடி

மழை பொய்த்துப்போவதால் தாம் விதைத்தவற்றைக்காக்க விவசாயிகள் நாடும் மாற்று வழி நிலத்தடி



வெளியிட்டுள்ளது.

இது மட்டுமன்றி இவ்வாறு பாரிய தொகையில் நீர் அகற்றப் பட்டுக்கொண்டிருப்பது புவியின் ஈர்ப்புத்தன்மையில் கூட மாற்றத்தினை ஏற்படுத்தலாம் என எச்சரிக்கின்றனர் பௌதியவியலாளர்கள் .

புவி கொண்டுள்ள திணிவில் புவியீர்ப்பு தங்கியுள்ளதால் இவ்வாறு பாரிய அளவிலான நீர் அகழ்வு இந்த நிலைமையை ஏற்படுத்தும் என்பது அவர்கள் கருத்து.

உலகத்தின் இருப்பை பல வழிகளில் மனித செயற்பாடுகள் கேள்விக்குள்ளாகி வருகின்றன. இதில் கால நிலை மிக முக்கியமானது. இன்று இது பற்றி உலக நாடுகள் கடுமையாக கருத்தூன்றிக் கவனம் செலுத்தி வருகின்றன.

இந்த வகையில் இவ்வாறு விஸ்வரூபம் எடுக்கவுள்ள நிலத்தடி நீர் பிரச்சினைக்கு மாற்று வழி தேடாவிடின் அல்லது குறையும் நீரைப் பிரதியிடப்போதுமான நடவடிக்கை எடுக்காது விடின் நிலத்தடி நீரைப் பெற்றுக்கொள்ளும் இடங்களில் உயிரின் இருப்பு மற்றும் நீடிப்பு கேள்வியாகவே தொடரும்.

# யுவராஜ், தோனி பொறுப்பான ஆட்டம்; இந்தியா தொடரில் முன்னிலை பெற்றது

(டில்லி)

யுவராஜ் சிங்-தோனி ஜோடியின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி தொடரில் முன்னிலை பெற்றது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 7 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றிபெற்று தொடரில் 1:1 என்ற கணக்கில் சமனிலையிலுள்ள நிலையில் மூன்றாவது போட்டி நேற்று டில்லியில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்ப ஜோடி வோட்ஷன்-பொன்டிங் இணைந்து சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 16.2 ஓவர்களில் 72 ஓட்டங்களை எடுத்த போது வோட்ஷன் 59 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த பொன்டிங்-ஹசி ஜோடி நிதானமான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இதில் அரைச்சதம் கடந்த அணித்தலைவர் ரிக்கிப் பொன்டிங் 92 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 59 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய வையிட் பூச்சியத்துடன் வந்த வேகத்திலேயே அரங்கு திரும்ப அவுஸ்திரேலிய அணி 32.4 ஓவர்களில் 129 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய வோக்ஸ் 17, ஹென்ரி ஹயூஸ் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து பெரிதாக சோபிக்காத போதும் மைக்கல் ஹசி அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி அணியை வலுப்படுத்தினர்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை யிழந்து 229 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கெல் ஹசி 82பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 81 ஓட்டங்களையும் ஜோன்ஸன் 9ஓட்டங்களையும் ஆட்டமிழக்கா மல் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஜடேஜா 2விக்கெட்டுக்களையும், ஹர்பஜன் சிங், யுவராஜ்சிங், ரெய்னா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 230 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பம் சொதப்பியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வீரேந்திர சேவாக் 11 ஓட்டங்களுடனும் டெண்டுல்கர் 32 ஓட்டங்களுடனும் காம்பீர் 06 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இந்திய அணி 13.3ஓவர்களில் 51 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

இந்நிலையில் ஜோடி சேர்ந்த யுவராஜ்-தோனி சிறப்பான இணைப்பை வழங்கி இந்திய அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

இந்த ஜோடியை பிரிக்க அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங் பல வியூகங்களையும் வகுத்தும் பயனளிக்கவில்லை.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 28.4 ஓவர்களில் 148 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அணித்தலைவர் தோனி 95 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 70 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ரெய்னா, யுவராஜ் சிங்குடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வழங்க இந்திய அணி 48.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 230 ஓட்டங்களை எடுத்து ஆறு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய யுவராஜ் சிங் 96 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் உட்பட) 78 ஓட்டங்களையும் சுரேஸ் ரெயினா 9 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் மைக்கல் ஜோன்சன், ஹென்றி ஹயூஸ், ஹயூரிச் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 2:1 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை பெற்றது.

# ஜெயசூரியாவின் கிரிக்கெட் எதிர்காலம்?



(கொழும்பு)

உலக நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக கருதப்படும் இலங்கை அணி அதிரடி நாயகன் சனத் ஜெயசூரியாவின் கிரிக்கெட் எதிர்காலம் தொடர்பில் கேள்வி எழுந்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற இரண்டு ஒரு நாள் போட்டி தொடர்களில் சனத் ஜெயசூரியா சோபிக்க தவறியமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

40 வயதான சனத் ஜெயசூரியாவை எதிர் வரும் இந்திய கிரிக்கெட் சுற்று பயணத்தின் போது ஓர் சகல துறை ஆட்ட வீரராக பயன்படுத்த அணித்தலைவர் குமார் சங்கக்கார உத்தேசித்துள்ளார்.

இதன்படி சனத் ஜெயசூரியா இந்தியத் தொடரில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறக்கப்படமாட்டார் என அறிவிக்கப்படு கிறது.

உபுல் தரங்க மற்றும் ரி.எம்.டில்சான் ஆகியோர் அணியின் ஆரம்பத் துடுப்பட்ட வீரர்களாக பங்கேற்பார்கள் என அணித்தலைவர் சங்கங்கார குறிப்பிட்டுள்ளார்.

இந்தியத் தொடரில் சனத் ஜெயசூரிய வெளிப்படுத்தும் திறமையும் அடிப்படையும் அவரது எதிர்காலம் நிர்ணயிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடர் வரையில் ஜெயசூரிய பங்கேற்பாரா? என்பது கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது என கிரிக்கெட் விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சனத் ஜெயசூரிய இதுவரையில் 441 ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் பங்கேற்றுள்ளதுடன் இதில் 387 போட்டிகளில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக பங்கேற்றுள்ளார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக பங்குபற்றி இலங்கை அணிக்காக சனத் ஜெயசூரிய 12 ஆயிரத்து 738ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


# டோகா ஓபன் டென்னிஸ் அரையிறுதியில் செரினா

(கட்டார்)

டோகா ஓபன் டென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் முன்னேறினார்.

உலகின் முதல்-8 வீராங்கனைகள் பங்கேற்கும் டோகா ஓபன் சம்பியன்ஷிப் டென்னிஸ் தொடர் கட்டாரில் நடக்கிறது.

இதில் மரூன் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ரஷ்யாவின் எலினா டெமன்டிவாவை சந்தித்தார்.



செரினா முதல் செட்டை 6-2 என மிகச் சுலபமாக கைப்பற்றினார். தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய செரினா இரண்டாவது செட்டை 6-4 என தன்வசப்படுத்தினார். இறுதியில் செரினா 6-2,6-4 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்றார்.

முன்னதாக செரினா முதல் போட்டியில் ரஷ்யாவின் கஸ்னட்சோவா (7-6,7-5), 2 ஆவது போட்டியில் தனது சகோதரி வீனஸ் வில்லியம்ஸ் (5-7,6-4,7-6) இருவரையும் வீழ்த்தியிருந்தார். இப்பிரிவில் நடந்த மூன்று போட்டியிலும் வெற்றி கண்ட செரினா அரையிறுதிக்கு ஜோராக முன்னேறினார்.

**வோஸ்னியாக்கி அபாரம்**

வையிட் பிரிவில் நடந்த போட்டியில் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, ரஷ்யாவின் ஸ்வனரோவாவை 6-0,6-7,6-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

முன்னதாக வோஸ்னியாக்கி, பெலாரசின் விக்டோரியா அசரன்காவை வீழ்த்தியிருந்தார். இதன் மூலம் இரண்டு போட்டியில் வெற்றி கண்ட வோஸ்னியாக்கி அரையிறுதிக்கு தகுதிபெற்றார்.

# இருபது-20 உலகக் கிண்ணம் சுலப பிரிவில் இந்திய அணி

(செயின்ட் லூசியா)

மேற்கிந்தியத் தீவுகளில் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள இருபது-20 உலகக் கோப்பை தொடரில் இந்திய அணி சுலப பிரிவில் இடம் பெற்றுள்ளது. தரவரிசையில் இந்தியாவுக்கு 6ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாவது இருபது-20 உலகக் கோப்பை தொடர் அடுத்த ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் மே 16ஆம் திகதி வரை மேற் கிந்தியத் தீவுகளில் நடக்கிறது.

இதில் இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 12 அணிகள் பங்கேற்கின்றன. ஏற்கனவே அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட 10 அணிகள் தகுதி பெற்று விட்டன. மீதமுள்ள இரண்டு அணிகள் தகுதிச் சுற்று மூலம் தேர்வு செய்யப்படும்.

இந்த 12 அணிகளுக்கும் சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த இரண்டாவது இருபது-20 உலகக் கோப்பைத் தொடரில் அணிகளின் செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தரவரிசை வழங்கப்பட்டது.

இதில் இந்திய அணிக்கு 6ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது. கோப்பை வென்ற பாகிஸ்தான் அணிக்கு முதலிடமும் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இலங்கை அணிக்கு இரண்டாவது இடமும் வழங்கப்பட்டுள்ளது.

தவிர தென்னாபிரிக்க (3ஆவது), மேற்கிந்தியத்தீவுகள் (4ஆவது), இங்கிலாந்து, (5ஆவது) அணிகள் முதல்-5இல் உள்ளன.

அவுஸ்திரேலிய அணிக்கு 9ஆவது இடம் கொடுக்கப்பட்டுள்ளது. நியூசிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு முறையே 7ஆவது மற்றும் 8ஆவது இடம் அளிக்கப்பட்டது.

சிம்பாவே அணிக்கு 10 ஆவது இடமும் தகுதிச்சுற்றில் தேர்வு செய்யப்படும் அணிகளுக்கு 11 மற்றும் 12ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது.

**சுலப சுற்று**

தரவரிசை வழங்கப்பட்ட இந்த 12 அணிகள் ஏ,பி,சி,டி என நான்கு பிரிவாக பிரிக்கப்பட்டது. இதில் இந்திய அணி சி பிரிவில் தென்னாபிரிக்கா மற்றும் தகுதிச் சுற்று-1 அணிகளுடன் இடம் பெற்றுள்ளது.

தவிர இத்தொடரில் இந்திய அணி தனது முதல் போட்டியில் தகுதிச் சுற்றில் தேர்வு செய்யப்படும் அணியுடன் அடுத்த ஆண்டு மே முதலாம் திகதி செயின்ட் லூசியாவில் நடக்கும் போட்டியில் பங்கேற்கிறது.

பின்னர் மே 2ஆம் திகதி நடக்கும் போட்டியில் இந்திய அணி தென்னாபிரிக்காவை எதிர்கொள்கிறது.

இதன் மூலம் இந்திய அணி சுப்பர்-8 சுற்றுக்கு முன்னேற இரண்டு போட்டியில் ஒன்றில் வெற்றி பெற்றால் போதுமானது என்பதால், எளிதில் அடுத்த சுற்றுக்கு தகுதி பெறலாம்.


**பெண்கள் இருபது-20**

பெண்களுக்கான இருபது-20 உலகக் கோப்பை தொடர் அடுத்த ஆண்டு மே 5 முதல் 16ஆம் திகதி வரை மேற்கிந்தியத் தீவுகளில் நடக்கிறது.

இதில் இந்தியா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கின்றன. இத்தொடரில் பங்கேற்கும் இந்திய அணிக்கு 4 ஆவது இடம் வழங்கப்பட்டு பி பிரிவில் நியூசிலாந்து, இலங்கை, பாகிஸ்தான் அணிகளுடன் இடம் பெற்றுள்ளது.

இந்திய அணி மே 6,8,10ஆம் திகதிகளில் நடக்கும் லீக் போட்டியில் முறையே நியூசிலாந்து பாகிஸ்தான், இலங்கை அணிகளை சந்திக்கிறது.

# கல்விச்சாலை நிகழ்வுகளின் பதிவுகள்








யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த வியாழக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் திருமதி வே.பேரின்பநாதன் தலைமையுரையாற்றுவதையும் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் கல்லூரி மாணவர்களின் நாட்டிய நாடக நிகழ்வையும் மாணவிகளில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.





கொக்குவில் இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் கல்லூரி அதிபர் ஏ.அகிலதாஸ் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் விருந்தினர்கள் அரங்கத்திற்கு அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சுங்கவரித் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் எஸ்.இராஜேந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.





திருநெல்வேலி இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலையில் கடந்த 29.10.2009 அன்று பெற்றோர்களுக்கான கல்வி விழிப்பூட்டல் கருத்தரங்கு நடைபெற்றது. யாழ். கல்வி வலய வள ஆளணியினர் கருத்துரை வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள், பெற்றோர்களையும் படங்களில் காணலாம். படங்கள்:ரம்சன்ராஜ்







காலங்கள் போனாலும் எமது தரமான உற்பத்தி மாறவில்லை. மற்றவர்களைப் போல் நாம் போலியானவற்றை வழங்கமாட்டோம் நவீன யுகத்தில் திறமையான தொழில் நுட்பங்களைக் கொண்டு உறுதியான சைக்கிள்களை உற்பத்தி செய்து விநியோகிக்கின்றோம்.

50 வருட சேவையில் உங்களுடன்

AIR BIKE
ATARI
KAMIKAZI
BICYCLES

CENTRAL CYCLE STORES

93, Dam Street, Colombo-12
Tel: 0112441597, 0112432183
0112338220, 0114749678
0114910037
Fax: 0112338626
E-mail: cycle_20000@yahoo.com
Mobile: 0777763710

ஆறுதல் சொல்ல ஆட்கள் உண்டே தவிர, உண்மையான உதவியாளர்கள் இல்லை.

–இந்தியா

# வலம்புரி

## காணாமல் போனவர்களுக்கு நிவாரணக் கொடுப்பனவு உண்டா?

காலத்தின் அசைவு பல விடயங்களை மறக்க வைத்துள்ளது. இந்த மறதிக்குள் நீதி, நியாயம், நிவாரணம் என்பன மறக்கப்பட்டு அல்லது மறைக்கப்பட்டுப் போவது மிகப் பெரிய வேதனை.

இதில் 1996ஆம் ஆண்டு காணாமல் போனவர்களின் விவகாரம் குறிப்பிடத்தக்கது. 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைப் படையினர் கைப்பற்றியபோது யாழ்ப்பாண மக்கள் வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர்.

இவ் இடம்பெயர்வு, தென்மராட்சி மற்றும் வடமராட்சி ஆகிய பிரதேசங்கள் படையினரிடம் வசமாகியதைத் தொடர்ந்து முடிபுக்கு வர 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மீண்டும் மக்கள் யாழ்ப்பாணத்தில் குடியமர்ந்தனர்.

அரசு–படையினர் மீதான நம்பிக்கையுடன் மக்கள் திரும்பிய போதிலும், சுமார் அறுநூறு இளைஞர்–யுவதிகள் காணாமல் போன துயரம் இழப்புக்களைச் சந்தித்தவர்களின் மனங்களை ரணமாக்கிக் கொண்டேயிருக்கின்றது.

காணாமல் போனவர்களின் விடயத்தை முன்னிலைப்படுத்துவதற்காகக் காணாமல் போனோர் சங்கம் உருவாக்கப்பட்டு அமைச்சர்கள், அரச உயரதிகாரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் எனப் பலருக்கும் மகஜர்கள் வழங்கப்பட்டன.

எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த போது–அமைச்சர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த வேளைகளில் எல்லாம் காணாமல் போனவர்களின் உறவுகள் கரங்கூப்பி கண்ணீர் மல்கி ஐயா! எங்கள் பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள் என மன்றாடினர்.

இரக்கமற்ற இந்த நாட்டில் – மனநோயாளியை அடித்துக் கொல்லும் அதிக மனவியாதி கொண்டவர்கள் வாழும் இலங்கைத் தீவில் மன்றாட்டங்கள் அனைத்தும் தோற்றுப் போயின.

ஆக, காணாமல் போனவர்களைச் சிறைச்சாலைகளில் தேடும் ஒரு புதிய நடைமுறையை ரணில் விக்கிரமசிங்க அறிமுகப்படுத்தினார்.

ஏதோ நல்லூர்த் திருவிழாவில் காணாமல் போன பிள்ளைகளைத் தேடுவதைப் போல நினைத்து ரணில் நடந்து கொண்டார்.

காணாமல் போனவர்களின் விடயத்தில் செம்மணிப் புதைகுழி மட்டுமே எஞ்சியது–இப்போது அதுவும் காணாமல் போயிற்று.

காணாமல் போனவர்களின் உறவுகளுக்கு எந்த நிவாரணமும் கிடைக்கவும் இல்லை. எவரும் நடவடிக்கை எடுக்கவும் இல்லை என்ற குற்றச்சாட்டே எஞ்சியுள்ளது.

எனவே காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்பதே எமது தாழ்மையான கோரிக்கை.

# 7 கோடி ரூபா செலவில் வடமாகாணத்தில் இரண்டு புதிய இளைஞர் படையணி

## காரைநகரிலும் மன்னாரிலும் நிறுவத்திட்டம்

(கொழும்பு)

இளைஞர் விவகார அமைச்சினால் வட மாகாணத்தில் 7 கோடி ரூபா செலவில் இரண்டு புதிய இளைஞர் படையணியை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் காரைநகரிலும் மன்னாரிலுமே இந்த இரு இளைஞர் படையணிகளும் நிறுவப்படவிருக்கின்றன. வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து இடை விலகிய இளைஞர், யுவதிகளின் சிந்தனைகளை அபிவிருத்தி செய்து ஒழுக்கமுள்ள இளைஞர் சமுதாயத்தை உருவாக்கும் நோக்கிலேயே புதிய படையணிகள் நிறுவப்படவிருக்கின்றன.

அது மட்டுமன்றி வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைக்கு தேவையான இளைஞர் யுவதிகள் தயார்படுத்தப்படவிருக்கின்றனர். ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் பயிற்சி, தொழிற்துறை நிபுணத்துவம் பெற்றவர்களால் ஆலோசனைகள் வழங்கப்படும்.

தேசிய மரபுரிமை தொடர்பிலான அவதானம், கலை, கலாசாரம் தொடர்பிலான கல்வி, சமூக, விஞ்ஞானம் உள்ளிட்ட பாடத் திட்டங்கள் தொடர்பிலான விளக்கங்களும் வழங்கப்படும்.

வடக்கில் நிறுவப்படும் இவ்விரு புதிய இளைஞர் படையணி மத்திய நிலையங்களிலும் முதற்கட்டமாக 500 இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சியளிக்கப்படவிருக்கின்றது என்று இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ்.விரித்தமுல்ல தெரிவித்தார். (ஓ–6)

# கைது செய்யப்பட்டு விடுதலையான அகதி மீண்டும் அகதியாக பதிவதற்கு பொய் தகவல்

## பொலிஸ் விசாரணையில் அம்பலம்

(மண்டபம்)

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்டு விடுதலையான அகதி மீண்டும் இலங்கையிலிருந்து நேற்று முன்தினம் படகு மூலம் வந்ததாக நாடகமாடியது கியூ பிரிவு பொலிஸார் விசாரணையில் தெரியவந்தது.


இலங்கையிலிருந்து படகில் கடந்த வியாழக்கிழமை புறப்பட்டு அரிச்சல் முனைக் கடற்பகுதியில் நள்ளிரவில் இறங்கியதாக கூறிய பாலுச்சாமி (57) என்ற அகதி தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்துக்கு வந்தார். கியூ பிரிவு பொலிஸார் விசாரணையில் இவர் கடந்த 2007 பெப்ரவரியில் குடும்பத்துடன் படகு மூலம் தனுஷ்கோடி வந்தார். அவரிடம் அப்போது நடத்திய விசாரணையில் விடுதலைப்புலி அமைப்புடன் தொடர்புடையவர் என தெரியவந்தது.

இதனால் கைது செய்யப்பட்டு செங்கல்பட்டு சிறப்பு முகாமுக்கு மாற்றப்பட்டார். 2007 டிசம்பரில் விடுதலையாகி விமானம் மூலம் இலங்கை சென்றார்.

இலங்கையில் போர் உச்சக்கட்டம் அடைந்த போது விமானம் மூலம் மீண்டும் இந்தியா வந்தார். சென்னை அகதிகள் மறுவாழ்வு தனித்துணை கமிஷனரிடம் அகதியாக பதிவதற்கு அனுமதி பெறவில்லை.

இதனால் மண்டபம், உச்சிப்புளி உள்ளிட்ட பகுதிகளில் அனுமதி பெறாமல் வசித்து வந்தார். தற்போது அகதிகளுக்கான பணக்கொடை பெறுவதற்காக இலங்கையிலிருந்து நேற்று முன்தினம் படகு மூலம் அரிச்சல் முனைப்பகுதிக்கு வந்திறங்கியதாக பொய் கூறியது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து சென்னை அகதிகளுக்கான மறுவாழ்வு கமிஷனரிடம் அனுமதி பெற்று வருமாறு கூறி கியூ பிரிவு பொலிஸார் அனுப்பி வைத்தனர். (ஓ–6)





# உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று மாலை 4 மணிக்கு டைமன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் இறுதிக் சுற்றுப் போட்டியில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து டைமன் விளையாட்டுக்கழம் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ–7)

# முடிவில்லா வாழ்வு



நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம் . முடிவில்லாத வாழ்வைத் தேடி வருகின்றேன்... இறைவா உம் முன்னிலையில் மண்டியிட்டுக்கிடக்கிறேன். இயேசையா என்ற பாடல் வரிகள் இங்கு சாலப்பொருந்தும்.

ஆம், உலகில் தோன்றுகின்ற ஒவ்வொன்றும் மறையத்தான் வேண்டும். உலகில் முளைக்கின்ற ஒவ்வொன்றும் மடியத்தான் வேண்டும். இது இயற்கையின் நியதி. அதுபோல உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் இறக்கத்தான் வேண்டும். இதிலிருந்து யாரும் தப்பித்துகொள்ள முடியாது.

## பரமபிதா காட்டிய பாதை

அது ஆண்டவனே என்றாலும் மானிட உடல் கொண்டு இந்த உலகத்தில் பிறந்தால் அவனுக்கும் இறப்பு உண்டு. இது நம் பெருமான் இயேசுவின் வாழ்வின் உண்மை. எது உறுதியோ இல்லையோ ஆனால் சாவு என்பது உறுதி. இது தான் வாழ்வின் தத்துவம். இதுதான் உலகின் நிலையாமை.

இங்கு இறப்பு என்பது இயற்கையின் நிய்தி என்றாலும் அது ஒரு முடிவல்ல. மாறாக அது ஒரு நுழைவாயில், திறந்த வாசல், எதற்கு? முடிவில்லாத வாழ்வு, நிறை வாழ்வு பெறுவதற்கு இதைத்தான் எல்லா சமயங்களும் போதிக்கின்றன.

எது எப்படி இருந்தாலும் இறந்தவன் ஒவ்வொருவனும் இறுதியில் உயிர் பெற்று வீடுபேறு அடைய வேண்டும்.

இதைத்தான் இன்றைய நற்செய்தியும் எடுத்துக் கூறுகின்றன. நிலையில்லாதவைகளைப் பற்றிக் கொண்டிருப்பதை விட்டு நிலையான இயேசுவின் விழும்பியங்களை பற்றிக்கொள்வோம்.

அதே வேளையில் நிலையில்லாதது இவ்வுலகம், இப்பிறப்பு என்று சொல்லி முடங்கி விடாமல் வாழ்க்கை வாழ்வதற்கே ,வாழ்ந்து காட்டுவோம். என்ற துணிச்சலோடு பொருள் தேடுவோம். இதன் வழியாக இறப்பிற்கு அர்த்தம் காணுவோம்.

சிறப்பான வாழ்வே அர்த்தமுள்ள இறப்பிற்கு வழி என்று விக்டர் பிராங்க் கூறுவது இங்கு சாலப் பொருத்தமாகும்.

ஜோன் ரொபேர்ட்

# ஜனாதிபதி திருப்பதிக்குச் சென்றதை கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்

(காத்மண்டு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதி சென்று வெங்கடாசபதியை தரிசனம் செய்தார்.

நேபாளம் காத்மண்டுவிலிருந்து சிறப்பு வானூர்த்தி மூலம் ஆந்திர மாநிலம் ரேணி குண்டா விமான நிலையத்தை வந்தடைந் தார். பின்னர் அங்கிருந்து கார் மூலம் திருப் பதி கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இவரது வருகையையிட்டு விமான நிலை யத்திலிருந்து திருப்பதி கோவில் வரை காவல் துறையினர் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. இவரது பாதுகாப்புத் தொடர் பில் இலங்கைப் படை அதிகாரிகள் மாவட்ட ஆட்சியாளரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள் ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குத் திருப் பதி தேவஸ்தான அதிகாரிகள் சிறப்பு வரவேற் பளித்ததுடன் சிறப்பு வழிபாடுகளையும் ஒழுங் கமைத்தனர்.

இதேநேரம் மகிந்தவின் வருகையைக் கண்டித்துத் தமிழகத்திலிலுள்ள திருப்பதி தேவ ஸ்தான அலுவலகத்திற்கு முன்பாக தமிழீழ விடுதலை உணர்வாளர்கள் ஆர்ப் பாட்டம் ஒன்றையும் முன்னெடுத்துள்ளனர். (ந-5)

# புலிகள் மீதான தடையை தளர்த்த பிரித்தானிய எம்.பிக்கள் முயற்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப் பட்டுள்ள தடையை தளர்த்துவதற்கு பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முயற்சி மேற்கொண்டு வருவதாக அரசாங்க வட்டா ரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை ஊக்குவிக்க சில சக்திகள் முயன்று வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

2000-ம் ஆண்டு முதல் பிரித்தானியா வில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் புலிகள் யுத்த ரீதியாக தோற கடிக்கப்பட்டுள்ள போதிலும் சில புலம்பெயர் தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளில் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாக தெரிவிக் கப்படுகிறது.

பிரித்தானியப் நாடாளுமன்ற உறுப்பினர் களான சியபொயின் மெக்டொனாஹ்,மற்றும் ஜோஹான் ரெயான் ஆகியோர் இவ்வாறான முனைப்புக்களுக்கு ஆதரவளித்து வருவதாக குறிப்பிடப்படுகிறது. (ந-5)

# வவுனியா, புல்மோட்டை நலன்புரி முகாம்களிலிருந்து நேற்று 2139 பேர் அழைத்து வரப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா, புல்மோட்டை நலன்புரி முகாம் களில் தங்க வைக்கப்பட்டிருந்த யாழ். மாவட் டத்தை சொந்த இடமாகக் கொண்ட 696 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 139 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப் பட்டனர் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்,

வவுனியா,புல்மோட்டை நலன்புரி முகாம் களில் தங்க வைக்கப்பட்டிருந்த யாழ். மாவட் டத்தை சொந்த இடமாகக் கொண்ட 696 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 139 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து கரவெட்டி பிரதேச செயலக பிரிவைச் சொந்த இடமாகக்கொண்ட 353 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 97 பேரும் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவைச் சொந்த இடமாகக் கொண்ட 178 குடும்பங்களைச் சேர்ந்த 576 பேரும் நேற்று அழைத்துவரப்பட்டனர்.

இம்மக்கள் அந்தந்த பிரதேச செயலக அலுவலர்களினாலும் படையினராலும் குடும் பப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு உறவினர்க ளுடன் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் புல்மோட்டை நலன்புரி முகாம் களில் தங்கவைக்கப்பட்டிருந்து வவுனியா விற்கு கொண்டு வரப்பட்ட தீவகத்தை சொந்த இடமாகக் கொண்ட 165 குடும்பங்களைச் சேர்ந்த 466 பேர் நேற்று இரவு யாழ்ப்பாணத் திற்கு அழைத்துவரப்பட்டனர்.

இம்மக்கள் வேலணை பிரதேச செயலக பிரிவு, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரை நகர் அரசாங்க அதிபர் பிரிவுகளையும் சொந்த இடமாகக் கொண்டவர்கள்.

இவ்வாறு நேற்று அழைத்து வரப்பட்டவர் களுடன் நேரில் வந்து கலந்துரையாடிய சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவியையும் கையளித்தார்.

இத்துடன் நேற்று வரை வவுனியா நலன் புரி முகாம்களில் இருந்து யாழ். மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட 13 ஆயிரத்து 951 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 350 பேர் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப் பட்டு மீள்குடியமர்த்தப்பட்ட அல்லது உறவி னர், நண்பர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள னர் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் குறிப் பிட்டார்.

இதேவேளை வவுனியா நலன்புரி முகாம் களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் சாவ கச்சேரி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த ஆயிரத்து 300 பேரும் உடுவில், சண்டிலிப் பாய் பிரதேச பிரிவுகளைச் சேர்ந்த தலா 600 பேருமாக இன்று ஆயிரத்து 500 பேர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்படுவர் எனயாழ். மாவட்ட செயலக உதவித்திட்ட பணிப் பாளர் எஸ்.சுதர்ஷன் தெரிவித்துள்ளார். (ந-5)

## அத்தியாவசிய சேவை பணிப்புறக்கணிப்பு நவம்பர் மாதத்தில் நடத்த முடிபு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிக் கூட்டுத்தாபனம், துறைமுக அதிகாரசபை, இலங்கை மின்சார சபை, நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபை ஆகிய நான்கு அரச நிறுவனங்கள் இணைந்து மேற்கொள்ளவுள்ள பாரிய பணிப்புறக்கணிப்பு போராட்டம் நவம்பர் மாதத்தில் இரண்டாம் வாரத்தில் இடம்பெறும் என தொழில் சங்க தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றது.

இலங்கை மின்சார சபை தொடர்ந்து மூன்று நாட்கள் இந்த பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக ஏற்கனவே அறிவித்துள் ளது. எனைய நிறுவனங்களின் தொழில் சங் கங்களும் இந்த பணிப்புறக்கணிப்பு போராட் டத்துடன் தமது போராட்டங்களையும் முன் னெடுக்கவுள்ளன.

கொழும்பு விஹாரமஹாதேவி பூங்கா வில் இன்று நடைபெறும் தொழில் சங்க மாநாட்டில் பணிப்புறக்கணிப்பு நடைபெறும் திகதி உறுதியாக அறிவிக்கப்படும் எனவும் தொழில் சங்க பிரதிநிதி ஒருவர் தெரிவித் துள்ளார். (ந-5)

## த.தே.கூ...

குறைவு காரணமாகத் தற்போது சிவாஜிலிங் கம் வெளிநாடொன்றில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எஸ்.கஜேந் திரன் மற்றும் ஜெயானந்த மூர்த்தி ஆகிய இரு வரும் ஐரோப்பாவில் அரசியல் தஞ்சம் கோரி யிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ந-5)

## திருப்பதி...

ரேணிகுண்டா விமான நிலையத்தில் ஏராள மான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதி ராஜபக்ஷ செல்லும் வழி நெடு கிலும் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந் தது. (ந-5)

# எந்தத் தேர்தல் முதலில்? சுதந்திரக் கட்சிக்குள் குழப்பம்

(கொழும்பு)

முதலில் நடத்தப்பட வேண்டியது ஜனாதி பதி தேர்தலா பொதுத்தேர்தலா என்பது குறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற குழுவினருக்கு இடையில் இருவேறு கருத் துக்கள் நிலவி வருவதாக தகவல்கள் தெரி விக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் முத லில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது சாத கமானது என தெரிவிப்பதுடன் மற்றுமொரு பிரிவினர் பொதுத்தேர்தலை நடத்துவதே சிறந்தது என கூறுகின்றனர்.

இந்த நிலையில் எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தின் போது முதலில் எந்தத் தேர்தலில் நடத்துவது என்பது பற்றி கருத்தறிப்படல் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 15ஆம் திகதி பெந்தாறாம விளை யாட்டு அரங்கில் நடைபெறும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய மாநாட்டில் இது குறித்து கட்சியின் உறுப்பினர்களுக்கிடையில் இறுதியாகக் கருத்துக்கள் அறியப்பட்டு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது. (ந-5)

## ஆதரவு...

எவ்வாறெனினும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு கட்சியில் போட்டியிடுவதா அல்லது தனித்து போட்டியிடுவதா என்பது குறித்து இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை.

இதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆத ரவளிக்கும் அதேவேளை பொதுத் தேர்தல் களில் தனித்து போட்டியிடத் தீர்மானித்துள் ளதாக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. (ந-5)

## அரசியல் தஞ்சம் கோரியுள்ள...

இவர்கள் குறித்து அந்த நாடுகள் விரை வில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவுள் ளனர் எனவும் இதன் காரணமாக விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு மேலும் பாரியளவில் வீழ்ச்சியடைய வாய்ப்பிருப்பதா கவும் அந்தப் பேச்சாளர் மேலும் கூறியுள் ளார்.

இதேவேளை மிக நீண்ட காலமாக மேற் கொள்ளப்பட்டு வரும் இராஜதந்திர நடவடிக் கைகள் ஊடாக வெளிநாடுகளுக்கு இலங் கையில் காணப்படும் உண்மையான பாது காப்பு நிலைமைகள் குறித்துத் தெளிவுபடுத்த முடிந்துள்ளதாகத் தேசிய பாதுகாப்பு விவகா ரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சரு மான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஐரோப்பா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளன.

இதனால் அங்கு தஞ்சம் கோரியவர்க ளைத் தொடர்ந்தும் அகதிகளாக வைத்திருப் பது அநாவசியமானது என இலங்கை தூத ரக சேவை அதிகாரிகள் அந்த நாடுகளுக்கு விளக்கியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பி னர்கள் கூட நாட்டிலிருந்து தப்பிச் சென்று அகதிகளாக அந்த நாடுகளில் தங்கியுள்ளனர்.

அவர்களை அடையாளம் கண்டு இலங் கைக்குக் கொண்டு வருவதற்குத் தேவை யான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதா கவும் கெஹலிய ரம்புக்வெல மேலும் கூறி யுள்ளார். (ந-5)

## அமைச்சர்...

கேள்வி எழுப்பியுள்ளனர். ஆனால் நான் ஒன்றைக் கூறுவேன் கடந்த 29 ஆம் திகதி எனது இல்லத்திற்கு வருகை தந்த அரச தரப் பைச் சேர்ந்த இரு அமைச் சர்கள் என்னுடன் உணவருந்தி விட்டுச் சென்றனர் எனத் தெரி வித்துள்ளார். (ந-5)

## சரத் பொன்...

பதவியை வழங்கியதன் மூலம் சரத் பொன் சேகாவின் அதிகாரம் வரை யறுக்கப்பட்டுள்ள தாக எதிர்க்கட்சிகள் சுமத்தி வரும் குற்றச்சாட் டுகள் அடிப்படையற்றவை. இந்தப் பதவியை வகிப்பவர் நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் மிக முக்கிய பொறுப்புகளை உடையவர்.

பாதுகாப்பு அமைச்சிற்கு ஒத்துழைப்பு வழங்குதல்,இராணுவ தந்திரோபாயங்களை வகுத்தல்,கொள்கை வகுத்தல் உள்ளிட்ட முக்கிய கடமைகளை கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதி மேற்கொள்கிறார்.

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன் சேகாவின் ஒப்புதலுடன் இந்தப் பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.இராணுவ வீரர்கள் அரசி யலில் ஈடுபடுவதில் தவறில்லை எனினும் சீருடையில் இருக்கும் போது அரசியலில் ஈடுபடுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் கோத்தபாஜ ராஜபக்ஷ குறிப்பிட் டுள்ளார். (ந-5)

யாழ்மாவட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை
உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா வீதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்.வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்) (C-3634)
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.